ISBN : 978-81-685845-2-5

செந்தமிழறிஞர்கள்:108



நா வானமாமலை

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்



NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

https://www.annacentenarylibrary.org/pages/view/108.%20%E0%AE%A8%E0%AE%BE.%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%A9%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%AE%E0%AE%B2%E0%AF%88

செந்தமிழ்சிற்பிகள்

நா.வானமாமலை (1917 – 1980)



அறிமுகம்

திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரியில், ஆச்சாரமான வைணவக் குடும்பத்தில் 7.12.1917ல் பிறந்தவர் நா.வானமாமலை. நாடறிந்த வழக்கறிஞர் என்.டி.வானமாமலை இவரது பள்ளித் தோழர். திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் புதுமுகப் படிப்பையும், மதுரை அமெரிக்கன் கல்லூரியில் இளங்கலை வேதியியல் படிப்பையும் முடித்தார். சென்னை, சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் கல்வியியல் பட்டமும் பெற்றார். பின்னாளில் அமெரிக்கன் கல்லூரிப் பேராசிரியர் கார்மேகக் கோனாரின் வலியுறுத்தலில், முதுகலை படிப்பையும் முடித்தார்.
1942 தொடங்கி சில வருடங்கள் ஆசிரியர் பணியில் இருந்தார்.

அடிப்படையான விஞ்ஞான நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். பல அறிவியல் கட்டுரைகளை எளிமையுடனும் சுவையுடனும் எழுதினார். சிறுவர்களுக் கென 'காகிதத்தின் கதை', 'இரும்பின் கதை', 'ரப்பரின் கதை' முதலிய நூல்களை எழுதினார். 'விண்வெளி ரசாயனம்', 'விஞ்ஞானத் தொழில்நுட்பப் புரட்சியும் அதன் விளைவுகளும்' போன்ற இவரின் அறிவியல் நூல்கள் முக்கியமானவை.

தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் உபவிளைவாக 'அனைத்தும் ஆங்கிலம்' என மாறிய சூழலில், சி.சுப்பிரமணியம், மோகன்குமாரமங்கலம் போன்றவர்கள் தமிழில் அறிவியல் பாடநூல்கள் குறித்து அக்கறை கொண்டனர். அத்தருணத்தில் 'தமிழில் முடியும்' என்னும் தொகுப்பு நூல் ஒன்றை நா.வா. வெளிக்கொணர்ந்தார்.

தொ.பெ.மீனாட்சிசுந்தரம் துணைவேந்தராக இருந்தபோது, நா.வா.வின் கதைப்பாடல் தொகுப்புகளை, மதுரைப் பல்கலைக்கழகம் நூலாக வெளியிட்டது. கட்டபொம்மன் கதைப்பாடல், கட்டபொம்மன் கூத்து, கான்சாகிபு சண்டை, முத்துப்பட்டன் கதை, ஐவர் ராசாக்கள் கதை, காத்தவராயன் கதைப்பாடல் ஆகிய ஆறு நூல்கள் இவ்வாறு வெளியிடப்பட்டன. இவற்றுக்கு

நா.வா. எழுதிய ஆய்வு முன்னுரைகள் நாட்டாரியல் ஆய்வுகளுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக இன்றும் திகழ்கின்றன.

1967ல் 'நெல்லை ஆய்வுக் குழு' என்னும் அமைப்பை உருவாக்கினார். விடாமுயற்சி, படிப்பில் ஆர்வம், ஆய்வு ஈடுபாடு, அறிவியல் நோக்கு, சமூக அக்கறை உடையோர் யாரும் இக்குழுவில் உறுப்பினராகலாம். ஆய்வுக் குழுக் கூட்டங்களுக்கு நா.வா. தலைமை தாங்குவார். கூட்டச் செலவுகளை அவரே ஏற்பார். கட்டுரைகள் எழுதி வாசிக்கப்பட வேண்டும். விவாதங்கள் நடைபெறும். வெறும் பத்து பேரைக் கொண்டு தொடங்கப்பட்ட இந்த அமைப்பு, நாளடைவில் பாளையங்கோட்டை மட்டுமின்றி, தென்மாவட்டங்களிலும் பரவலாக ஆய்வுக் கூட்டங்களை நடத்தியது. பல துறைகள் சார்ந்து கட்டுரைகள் எழுதப்படுவதும், புதிய அறிவுத் துறை வரவுகள் குறித்த அறிமுகமும் இக்கூட்டங்களில் நடந்தேறின. இந்த ஆய்வுக் குழுவில் பங்கேற்றோர் பலர் இன்று படைப்பு, ஆய்வுத் துறைகளில் சுடர்விடுகின்றனர்.

ஆராய்ச்சி இதழ்

ஆய்வுக் குழுவில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளை வெளியிடவும், தமிழில் ஆய்வுக் களத்தை விரிவாக்கவும் 1969-ல்- 'ஆராய்ச்சி' என்னும் ஆய்விதழைத் தொடங்கினார். பல்துறை அறிஞர்களின் கட்டுரைகளுடன் ஆராய்ச்சிக் குழுவினரின் கட்டுரைகளும் இந்த இதழில் வெளிவந்தன. பொருளாதார நெருக்கடியிலும் இறக்கும் வரை அதனை நடத்தினார். இதன் பின்னரே எண்பதுகளில் சமூக, அரசியல், பொருளாதார, ஆய்விதழ்கள் பல வெளிவரத் தொடங்கின. இன்றும் நா.வா.வின் 'புதிய ஆராய்ச்சி'யாக அது வெளிவருகிறது.

தமிழ்மொழி, இலக்கிய ஆய்வுகளை வரலாறு, தொல் லியல், மானிடவியல், சமூகவியல், பண்பாட்டியல் போன்ற பிற துறைகளுடன் இணைந்த பல்துறை கூட்டாய்வுகளாக - தமிழியலாக வளர்த்தெடுத்ததில் நா.வா. முதன்மை யானவர். வரலாறு, பண்பாடு, தத்துவம், இலக்கிய ஆராய்ச்சி ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்த வர், மார்க்ஸியம் கல்விப்புலத்தில் ஒரு முறையியலாக வும், அணுகுமுறையாகவும் இன்று நிலைபெற்றிருப்பதற்கு வித்திட்டவர், நாட்டார் வழக்காற்றியலுக்குத் தமிழ்க் கல்விப்புலத்தில் உரிய அங்கீகாரம் பெற்றுத்தந்தவர் என்று இவரைப் பற்றிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

பிறரை எழுதச்செய்து, சுடர்களேற்றும் சுடராக விளங்கினார். கல்விப்புலத்துக்கு வெளியே ஒரு சிந்தனைப் பள்ளியை அவரால் உருவாக்க முடிந்தது. எனவேதான் எந்தப் பல்கலை, கல்லூரியிலும் தொழில்முறைப் பேராசிரியராக இல்லாத அவர் 'பேராசிரியர்' என்றே கொண்டாடப்பட்டார்.

(😊)(😊) ஞஞஞஞஞ (😊)(😊)

நா. வானமாமலை	
பாளையங்கோட்டை நகராட்சி உறுப்பினர்	
பதவியில் 1959–1965	
தொகுதி	கோட்டம் 1
மாநிலத் தலைவர், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்	

இந்திய பொதுவுடைமைக் கட்சியின் மாநிலக் கல்விப் பிரிவு பொறுப்பாளர்	
தனிப்பட்ட விவரங்கள்	
பிறப்பு	7 திசம்பர் 1917 நாங்குநேரி, திருநெல்வேலி மாவட்டம், மதராசு தலைமாகாணம், பிரித்தானிய இந்தியா (தற்போது தமிழ்நாடு, இந்தியா)
இறப்பு	பெப்ரவரி 2, 1980 (அகவை 62) கோர்பா, பிலாஸ்பூர் மாவட்டம், மத்தியப் பிரதேசம் (தற்போது கோர்பா மாவட்டம், சத்தீஸ்கர்-இல்), இந்தியா
குடியுரிமை	இந்தியர்
தேசியம்	தமிழர்
துணைவர்(கள்)	சீதையம்மாள் (இறப்பு: >1948) பத்மாவதி (1948-இறப்பு வரை)
உறவுகள்	வேங்கடம் (தங்கை) ஆழ்வான் (தம்பி)
பிள்ளைகள்	கிருஷ்ணமூர்த்தி நாராயணமூர்த்தி ராமமூர்த்தி கலாவதி அருணா அம்மணி
பெற்றோர்	திருவேங்கடத்தம்மாள் (தாய்) நாராயணன் தாதர் (தந்தை)

முன்னாள் மாணவர்	மதுரை திரவியம் தாயுமானவர் இந்து கல்லூரி அமெரிக்கன் கல்லூரி, மதுரை
பணி	எழுத்தாளர்
புனைப்பெயர்	நா.வா.

மறக்க முடியுமா?

பேராசிரியர் நா.வானமாமலை

https://keetru.com/index.php/2009-11-06-11-47-46/karunchetty-thamilar-sep-2017/33849-2017-09-17-13-01-03

எழில்.இளங்கோவன்

பேராசிரியர் நா.வானமாமலை!

இவர் எந்த ஒரு கல்லூரியிலோ, பல்கலைக்கழகத்திலோ பேராசிரியராகப் பணியாற்றவில்லை. தொழில் முறைப் பேராசிரியராகக் கூட இருந்ததில்லை. ஆனாலும் இன்றும் கூட அறிவுத் தளங்களில் இவர் பேராசிரியர் என்றே அழைக்கப்படுகிறார் என்பது இவரின் பெருமைக்குச் சான்று.



திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி இவரின் சொந்த ஊர். 7-.12.-1907 ஆம் ஆண்டு இவர் பிறந்தார்.

திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும், மதுரை அமெரிக்கன் கல்லூரியிலும் பயின்ற இவர் முதுகலைப் பட்டம் பெற்று, சில காலம் ஆசிரியராகப் பணியாற்றினார்.

பொதுவுடமைக் கொள்கையால் ஈர்க்கப்பட்ட நா.வா, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் கல்விப் பிரிவுக்குப் பொறுப்பாளர் ஆனார்.

அதைத் தொடர்ந்து சில அடிப்படையான விஞ்ஞான நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். பல அறிவியல் கட்டுரைகளை எளிமையாக எழுதியிருக்கிறார்.

'விண்வெளி ரசாயணம்' - 'விஞ்ஞானத் தொழில்புரட்சியும் அதன் விளைவும்' போன்ற அறிவியல் நூல்களும் இவரால் எழுதப் பெற்றுள்ளன.

ரப்பரின் கதை, இரும்பின் கதை, காகிதத்தின் கதை ஆகிய நூல்களை இவர் சிறுவர்களின் அறிவியல் சிந்தனைக்காக எழுதி இருக்கிறார்.

தமிழ்நாட்டில் தி.நா.சு., கி.வா.ஜ., பெரியசாமி தூரன், செ.அன்னகாமு போன்றவர்கள் நாட்டுப்புறப் பாடல்கள் குறித்து ஆர்வம்காட்டி வந்த காலம் அது.

அப்பொழுது நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரித்து அதன் வரலாறு, பாடியவர்கள், பாடல் வழங்கிய இடங்கள், அவை சார்ந்த நிலம், சூழல், மெய்ப்பொருள், பாடல்களைச் சேகரித்தோர் என்று விளக்கங்களுடன் நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டார் நா.வானமாமலை.

'தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள்' (1960), 'தமிழர் நாட்டுப் பாடல்கள்' (1964) ஆகிய இரு தொகுப்புகள் அப்படி அவரால் வெளியிடப்பட்டனவாகும்.

நாட்டுப் புறப் பாடல், மானிடவியல், அடித்தள மக்களின் ஆய்வு போன்றவை அறிமுகமாகி விவாதத்தில் இருக்கும் போது 'நாட்டுப்புறவியல்' என்ற கலைச் சொல் உருவானது.

அதை நா.வானமாமலை 'நாட்டார் வழக்காற்றியல்' என்றார். இவ்விரு சொற் பெயர்கள் இன்றும் வழக்கில் இருந்து வருகின்றன.

நாட்டார் கதைகளை, பாடல்களைப் பலர் தொகுத்தார்கள், வெளியிட்டார்கள்.

சமூகவியல், மானிடவியலில் அந்நாட்டார் வழக்காற்றியல் எப்படி மையம் பெறுகிறது என்பதைச் சுட்டிக் காட்டினார். இவைகளை ஆய்வுகளுக்கும் உள்ளாக்கினார் நா.வானமாமலை.

அதே சமயம் கதைப் பாடல்களுக்கும் முன்னுரிமை கொடுத்து, அவைகளை வெளிக் கொண்டுவந்த பெருமை இவரையே சாரும்.

பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக இருந்த போது, அவரின் துணையுடன் ஆறு கதைப் பாட்டிலக்கியங்களைப் பதிப்பாசிரியராக வெளியிட்டார் நா.வா. வெளியிட்டது மதுரைப் பல்கலைக்கழகம்.

அவை,

1. கட்டபொம்மன் கதைப்பாடல்

2. கட்டபொம்மன் கூத்து

- இவை இரண்டும் கட்டபொம்மன் குறித்த வரலாறை மக்களின் நாட்டுப்புறப் பார்வையில் சொல்கிறது.

3. முத்துப்பட்டன் கதை

இந்நூல் அருந்ததியர் சமூகம் குறித்த, குற்றால மலைப்பகுதியின் கதையாகச் சொல்லப்பட்டுள்ளது. செக்கோசுலோவேக்கிய மொழியில், மொழிபெயர்க்கப்பட்ட முதல் தமிழ்க் கதைப் பாட்டிலக்கியம் இது.

4. கான்சாகிபு சண்டை

மருதநாயகம் என்று அழைக்கப்பட்ட கான்சாகிப் நடத்திய சண்டை பற்றிய நூல் இது.

5. காத்தவராயன் கதைப் பாடல்

ஒடுக்கப்பட்ட பறையர் சமூகத்தளத்தில் இக்கதைப் பாட்டிலக்கியம் அமைகிறது.

6. ஐவர் ராஜாக்கள் கதை

- நாயக்க மன்னரின் மேலாதிக்க ஆட்சியை ஏற்க மறுத்த ஐந்து பாண்டிய வம்சத்தைச் சேர்ந்தவர்களின் கதை இது.

இந்தக் கதைப் பாட்டிலக்கியப் பதிப்பின் வரலாற்றுக் குறிப்புகள், வழக்குச் சொற்கள், நிகழ்வின் குறிப்புகள், சொல் விளக்கம் ஆகிய சிறப்புகள் உடையன. இவற்றுடன் நா.வானமாமலையின் ஆய்வு முன்னுரைகள் மிக முக்கியத்துவம் பெற்றதாக அமைந்திருக்கின்றன.

1975ஆம் ஆண்டு தார்வார் திராவிட மொழியின் பல்கலைக் கழகத்தில் ஆய்வுத்துறையில் பணியாற்றினார்.

அப்பொழுது International of Tamil Folk Creations என்று இவரால் எழுதப்பட்ட நாட்டுப்புற இலக்கிய ஆய்வு நூல் மிகச் சிறப்பாகப் பேசப்பட்டது.

இந்நூலும், இவரின் பல ஆங்கிலக் கட்டுரைகளும் இன்னமும் தமிழில் மொழிபெயர்க்கப் படவில்லை.

தமிழின் ஆய்வுத் தளத்தை விரிவுபடுத்தும் நோக்கில் ‘ஆராய்ச்சி’ என்ற ஆய்விதழை 1969ஆம் ஆண்டு தொடங்கினார் இவர்.

இதில் இவரின் ஆய்வுகள் மட்டுமின்றி, பல்வேறு துறை சார்ந்த ஆய்வறிஞர்களின் ஆய்வுக்கட்டுரைகளையும் வெளியிட்டு வந்தார்.

பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்குள்ளும், தன் இறுதிகாலம் வரை இவ்விதழை இவர் நடத்தி வந்தது குறிக்கத்தக்கது.

இந்திய நாத்திகமும் மார்க்சியமும் - இலக்கியத்தின் உள்ளடக்கமும் உருவமும் &- உயிரின் தோற்றம் &- உரைநடை வளர்ச்சி -- கட்டபொம்மன் கதைப்பாடல் -- கட்டபொம்மன் கூத்து- - கான்சாயபு சண்டை -- முத்துப்பட்டன் கதை &- காத்தவராயன் பாடல் -- ஐவர் ராஜாக்கள் கதை &- தமிழ்நாட்டில் சாதி சமத்துவப் போராட்டம் &-

தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள் &- தமிழ் நாட்டுப் பாடல்கள் -- தமிழர் பண்பாடும் தத்துவமும் -- தமிழர் வரலாறும் பண்பாடும் -- பழங்கதைகளும் பழமொழிகளும் - புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும் &- மக்களும் மரபுகளும் &- மார்க்சிய அழகியல் &- மார்க்கிய சமூக இயல் கொள்கை - வ.உ.சி முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி -- Studies in Tamil Folk Literature ஆகிய இவரின் 22 நூல்களும் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன.

இவரின் இளமைக் காலத்தில், நாங்குநேரி வட்டார விவசாய இயக்கத்திலும், நெல்லை மாவட்டத் தொழிலாளர் இயக்கத்திலும் செயல்பட்டார்.

புகழ்பெற்ற திருநெல்வேலி சதிவழக்கு விசாரணைக் கைதிகளுள் இவரும் ஒருவர்.

கோயில் நுழைவு, சாதி ஆதிக்கத்திற்கு எதிராக, நில மீட்புப் போராட்டங்கள் எனப் பல்வேறு போராட்டங்களில் இவர் பங்கு கொண்டுள்ளார்.

நகராட்சி உறுப்பினராகவும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலத்தலைவராகவும் இவர் ஆற்றிய சமூகப் பணிகளும் மறக்கக் கூடியவை இல்லை.

இப்படிப்பட்ட பெரும் சிறப்புக்கு உரிய பேராசிரியர் நா.வானமாமலை அவர்கள் தன் 73ஆம் வயதில் 1980ஆம் ஆண்டு காலமானார்.

நாட்டாரியல் ஆய்வு

1955-ம் ஆண்டு மார்க்சிய அறிஞரான பி.சி. ஜோஷி தமிழகத்திற்கு வருகை தந்த போது நா. வானமாமலை அவரை சந்தித்து பேசினார். அப்போது பி.சி. ஜோஷி நாட்டார் வழக்காற்றியல் பற்றி வானமாமலையிடம் உரையாடி அவருக்கு அத்துறையில் நாட்டம் கொள்ளச் செய்தார். இதன் விளைவாக பேராசிரியருக்கு கவனம் கிராமியப் பாடல்கள், கதைகள் பக்கம்

திரும்பியது. சரஸ்வதி,தாமரை போன்ற பத்திரிக்கைகளில் சிறு சிறு கட்டுரைகள் எழுதினார்.

1959-ம் ஆண்டு வெளிவந்த தாமரை இதழில் 'சின்னத் தம்பி வில்லுப்பாட்டு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதினார். சரஸ்வதியில் 'முத்துப்பட்டன் கதை'யை வெளியிட்டார். ஆண்டாள் பாடல்களில் கிராமியப் பண்பாட்டின் கூறுகள் இருப்பதைச் சுட்டிக் காட்டி தாமரையில் 'தொல்குடி மக்களின் உலகக் கண்ணோட்டம்' என்ற கட்டுரையை எழுதினார். தாமரை (1966, 1967) இதழ்களில் 'நாட்டுப் பாடல்கள் விவாதம்'என்ற தலைப்பில் கட்டுரைகள் எழுதினார்.

'நாட்டுக் கதைப் பாடல்களில் சமூக உள்ளடக்கம்' (தாமரை - பிப்ரவரி 1968), 'கொள்ளைக்காரர்களும் நாட்டுப்பாடல்களும் (தாமரை - ஆகஸ்ட் 1968)', 'வில்லுப்பாட்டுக் கதையும் கதை மாந்தர்களும் (தாமரை - ஏப்ரல் 1974)', 'இராமப்பையன் அம்மானை பாத்திரங்களின் சமூகத் தன்மை '(தாமரை - ஜீன், ஜீலை 1974), 'கன்னட நாட்டுப் பாடல்களின் வீரர் படிமம்' (தாமரை - 1977)".

இக்கட்டுரைகள் மூலம் நாட்டார் வழக்காற்றியல் பணிக்குரிய அடித்தளத்தையும், கோட்பாட்டு அணுகு முறையையும் விளக்கினார். இம்முயற்சியின் விளைவாக 'தமிழ் நாட்டு பாமரர் பாடல்' நூலை1960-ம் ஆண்டு வெளியிட்டார். இந்நூல் வெளிவர உறுதுணையாக இருந்தவர்கள் அப்போது புகழ் பெற்ற வில்லிசைக் கலைஞர்களாக இருந்த கார்க்கி, எஸ். எஸ். போத்தையா, ராமசந்திரன், செல்வி. டி. மங்கை.

தமிழ்நாடு கலையிலக்கியப் பெருமன்றம் சார்பில் கு. சின்னப்ப பாரதி, எஸ். எஸ். போத்தையா, சிவகிரி கார்க்கி, வாழப்பாடி இராமச்சந்திரன் அகியோர் உதவியுடன் நா. வானமாமாமலை நாட்டார் பாடல்களைச் சேகரித்து சரி பார்த்து விளக்கக் குறிப்புகள் எழுதி 1964-ம் ஆண்டு 'தமிழர் நாட்டுப்பாடல்கள்' என்ற தலைப்பில் பெரிய நூலாக வெளியிட்டார். இதன் பின் பல்வேறு நாட்டார் பாடல்களை சேகரித்து

தனித்தனியாக வெளியிட்டார். இவற்றில் காலத்தால் முன்னர் வெளிவந்தது 'கட்டபொம்மு கதை' (1960).

1975-76-ல் தமிழறிஞர் டாக்டர் வ.ஐ. சுப்பிரமணியம் வழியாக தார்வார் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழி இயல் கழகத்தின் சார்பில் பேராய்வாளர் பணி கிடைத்தது. இந்த ஓராண்டு பணியில் நாட்டாரியில் சார்ந்து அவரது பார்வையை தொகுத்து ஒரு ஆய்வேட்டை உருவாக்கினார். இந்த ஆய்வேடு வானமாமலையின் மறைவுக்கு பின் "The Interpretation of the Folk Creations" என்ற தலைப்பில் 1981-ம் ஆண்டு திராவிட மொழி இயல் கழகத்தின் சார்பில் வெளியானது. இந்த நூலின் அடிப்படையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் பேராசிரியருக்கு டி.லிட் பட்டம் அவரது மறைவுக்குப் பின் வழங்கியது.

விமர்சனங்கள்

நா.வானமாமலையின் மார்க்ஸிய நோக்கு கொண்ட நாட்டாரியல் தொகுப்பு முறை மீது பிற்காலத்தில் விமர்சனங்கள் உருவாயின. அவர் நாட்டாரியல் கலைகளில் உள்ள சாதிப்பெயர்களை நீக்கியதும், வசைச்சொற்களை அகற்றிப் பதிப்பித்ததும், மார்க்ஸிய நோக்கில் மூலபாடங்களில் மாற்றங்களை உருவாக்கியதும் பின்னாளைய நாட்டாரியல் ஆய்வாளர்களால் நாட்டாரியல் முறைமைக்கு எதிரானது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

நூல்கள்

நாட்டார் வழக்காற்றியல்

- தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள், சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (1960)
- கட்டபொம்மன் கதைப்பாடல், சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (1961)
- தமிழர் நாட்டுப் பாடல்கள் சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (1964)

- வீணாதி வீணன் கதை, சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (1967)
- Studies in Tamil Folk Literature, Madras N.C.B.H (1969)
- வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப்பாடல், மதுரை பல்கலைக்கழகம், மதுரை (1971)
- முத்துப்பட்டன் கதைப்பாடல், மதுரை பல்கலைக்கழகம், மதுரை (1971)
- காத்தவராயன் கதைப்பாடல், மதுரை பல்கலைக்கழகம், மதுரை (1971)
- கட்டபொம்மு கூத்து, மதுரை பல்கலைக்கழகம், மதுரை (1972)
- கான்சாகிபு சண்டை, மதுரை பல்கலைக்கழகம், மதுரை (1972)
- ஐவர் ராசாக்கள் கதை, மதுரை பல்கலைக்கழகம், மதுரை (1972)
- Interpretation of Tamil Folk Creations, D.L.A. Trivandrum (1981)

வரலாறு

- தமிழர் வரலாறும் பண்பாடும், சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (1966)
- வரலாறும் வக்கிரங்களும் ரொமீலாதாப்பர் (மொ. பெ), சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (1973)
- வ.உ.சி. முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி, சென்னை மக்கள் வெளியீடு (1980)
- தமிழ்நாட்டில் சாதி சமத்துவ போராட்டக் கருத்துக்கள், சென்னை, மக்கள் வெளியீடு (1980)

பண்பாடு

- தமிழர் பண்பாடும் தத்துவமும், சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (1973)
- பழங்கதைகளும், பழமொழிகளும், சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (1980)

இலக்கியம்

- பாரதியும் தொழிலாளரும், சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (1964)
- இலக்கிய உலகம் எதிர்ப்பதென்ன, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் (1967)
- புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும், சென்னை, மக்கள் வெளியீடு (மார்ச், 1975)
- உரைநடை வளர்ச்சி, சென்னை, மக்கள் வெளியீடு (1978)

குழந்தை இலக்கியம்

- ரப்பரின் கதை, (கூட்டாசிரியர் எஸ். தோத்தாத்ரி), திருநெல்வேலி எஸ். ஆர். சுப்ரமணியபிள்ளை வெளியீடு (ஏப்ரல், 1962)
- இரும்பின் கதை, திருநெல்வேலி எஸ். ஆர். சுப்ரமணியபிள்ளை வெளியீடு (ஜனவரி, 1964)

மொழிபெயர்ப்பு நூல்கள்

- விண்யுகம் (மூலம்: ஸ்டீபன் ஹெய்ம்), நெல்லை பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட், திருநெல்வேலி (1960)
- ஆ. தெ. உடலும் உள்ளமும் (மூலம்: பாவ்லோவ்), நெல்லை பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட், திருநெல்வேலி (1960)
- ஆ. தெ. உயிரின் தோற்றம் (மூலம்: ஏ.ஐ. ஒபாரின்), சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (1960)
- ஆ. தெ. உடலியல் மருத்துவ வரலாறு (கூட்டாசிரியர் எஸ். தோத்தாத்ரி), சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (1960)
- வரலாறும் வக்கிரங்களும் (ரொமீலாதாப்பர்), சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (1973)
- விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சி, சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (1983)

தத்துவம்

- பண்டைய வேதத் தத்துவங்களும் வேதமறுப்பு பௌத்தமும், மக்கள் வெளியீடு, சென்னை (மார்ச் 1976)

- மார்க்சிய சமூக இயல் கொள்கை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை (1976)
- மார்க்சிய தத்துவம் இயக்கவியம் பொருள் முதல் வாதம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை (1977)
- மார்க்சிய அறிவுத் தோற்றவியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை (1978)
- மார்க்சிய அழகியல், மக்கள் வெளியீடு, சென்னை (1978)

அரசியல்

- இந்தியர் கண்ட ரஷ்யா, ஜனசக்தி, சென்னை (1951)
- இந்தியக் கல்வித்துறையில் அமெரிக்க டாலர் ஊடுருவல், மக்கள் வெளியீடு, சென்னை (1975)

பதிப்பித்தவை

- தமிழில் முடியும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை (1965)
- மக்களும் மரபுகளும், சாந்தி, தூத்துக்குடி (1977)
- தமிழ் நாவல்கள் ஒரு மதிப்பீடு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை (1977)

நினைவு மலர்

- தமிழ் ஆராய்ச்சியின் புதிய எல்லைகள் (1977 - அறுபது மலர்)

திரு.நா.வானமாமலை அவர்களது நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள் https://www.tamilvu.org/library/nationalized/html/naauthor-84.htm	
01.	studies in tamil folk literature
02.	இந்திய நாத்திகமும் மார்க்சீயத் தத்துவமும்
03.	இலக்கியத்தில் உள்ளடக்கமும் உருவமும்

04.	உயிரின் தோற்றம்
05.	உரைநடை வளர்ச்சி
06.	ஐவர் ராசாக்கள் கதை
07.	கட்டபொம்மு கூத்து
08.	காத்தவராயன் கதைப்பாடல்
09.	கான்சாகிபு சண்டை
10.	தமிழ்நாட்டில் சாதி சமத்துவ போராட்டம்
11.	தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள்
12.	தமிழர் நாட்டுப்பாடல்கள்
13.	தமிழர் பண்பாடும் தத்துவமும்
14.	தமிழர் வரலாறும் பண்பாடும்
15.	பழங்கதைகளும், பழமொழிகளும்
16.	புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும்
17.	மக்களும் மரபுகளும்
18.	மார்க்சீய அழகியல்
19.	மார்க்சீய சமூக இயல் கொள்கை
20.	முத்துப்பட்டன் கதை
21.	வ.உ.சி.முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி
22.	வீரபாண்டிய கட்டபொம்மு கதைப்பாடல்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AE%B0%E0%AF%8D_%E0%AE%B5%E0%AE%B0%E0%AE%B2%E0%AE%BE%E0%AE%B1%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D_%E0%AE%AA%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%9F%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D

தமிழர் வரலாறும் பண்பாடும்



பதிப்புரை

நண்பர் திரு.நா. வானமாமலை அவர்கள் தமிழக கிராமிய இலக்கியங்களில் நல்ல ஈடுபாடும் புலமையும் பெற்றவர்கள். ‘தமிழர் வரலாறும் பண்பாடும்’ என்ற இவ் ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுப்பில் காணப்படும் கட்டுரைகள் சமுதாயத்தை முழுக் கோணத்திலும் ஆராய்ந்து சிறப்புச் செய்கின்றன.

இத்தொகுப்பின் முதல் கட்டுரை சமுதாய மாற்றங்களைப் புதிய அடிப்படையில் அணுகி, ‘தமிழக வரலாறு’ படைக்க வேண்டியதன் அவசியத்தை அழகுற வலியுறுத்துகிறது.

பண்டை வரலாற்றின் அரசியல், மொழி, கலை, இலக்கியம் முதலிய தமிழ்ப் பண்பாட்டினை இக் கட்டுரைத் தொகுப்பு புதிய பார்வையோடு ஆராய்கிறது. தமிழர் வரலாற்றை வரைவதற்கு இந்நூல் ஒரு தூண்டுகோலாக அமையுமென்று நம்புகிறோம்.

-பதிப்பகத்தார்

பண்

பொ

சோழ

புரா

தமிழ

மூடு

மொ

தமிழ

தமிழ

தமிழ

சிலப

இரா

காற்


நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் (ஓர் ஆராய்ச்சி)

சமூகக் கதைப்பாடல்கள்

ஆசிரியர்:நா. வானமாமலை/நூற்பட்டியல்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%86%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B0%E0%AF%8D:%E0%AE%A8%E0%AE%BE._%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%A9%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%AE%E0%AE%B2%E0%AF%88/%E0%AE%A8%E0%AF%82%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B2%E0%AF%8D

ஆசிரியர்:நா. வானமாமலை



2008 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் நாளில், இவரது படைப்புகளை, நாட்டுடைமை நூற்பட்டியலில் இணைத்தற்கான, தமிழ்நாடு அரசு அறிவித்த ஆணை

எழுத்தாவண மின்னூல்கள்

1. இந்திய நாத்திகமும் மார்க்சீயத் தத்துவமும்
   TXT-PDF--mobi--இவ்வடிவில் பதிவிறக்குக
2. வ. உ. சி. முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி
   TXT-PDF--mobi--இவ்வடிவில் பதிவிறக்குக

எல்லா பக்கங்களும் உள்ள மின்னூல்கள்

1. **மார்க்சீய அழகியல்** (85 பக்கங்கள், எல்லா பக்கங்களும் உள்ளன)
   - நூல்விவர மெய்ப்பு அட்டவணை இதன் எழுத்துரு வடிவம்
2. **முத்துப்பட்டன் கதை** (61 பக்கங்கள், எல்லா பக்கங்களும் உள்ளன)
   - நூல்விவர மெய்ப்பு அட்டவணை இதன் எழுத்துரு வடிவம்
3. **ஐவர் ராசாக்கள் கதை** (249 பக்கங்கள், சில பக்கங்கள் தெளிவாகயில்லை)
   - நூல்விவர மெய்ப்பு அட்டவணை இதன் எழுத்துரு வடிவம்
4. **கட்டபொம்மு கூத்து** (79 பக்கங்கள், எல்லா பக்கங்களும் உள்ளன)
   - நூல்விவர மெய்ப்பு அட்டவணை இதன் எழுத்துரு வடிவம்

5. **காத்தவராயன் கதைப்பாடல்** (68 பக்கங்கள், எல்லா பக்கங்களும் உள்ளன)
    - நூல்விவர மெய்ப்பு அட்டவணை இதன் எழுத்துரு வடிவம்
6. **உயிரின் தோற்றம்** (102 பக்கங்கள், எல்லா பக்கங்களும் உள்ளன)
    - நூல்விவர மெய்ப்பு அட்டவணை இதன் எழுத்துரு வடிவம்
7. **உரைநடை வளர்ச்சி** (66 பக்கங்கள், எல்லா பக்கங்களும் உள்ளன)
    - நூல்விவர மெய்ப்பு அட்டவணை இதன் எழுத்துரு வடிவம்
8. **கான்சாகிபு சண்டை** (123 பக்கங்கள், எல்லா பக்கங்களும் உள்ளன)
    - நூல்விவர மெய்ப்பு அட்டவணை இதன் எழுத்துரு வடிவம்
9. **தமிழர் வரலாறும் பண்பாடும்** (152 பக்கங்கள், எல்லா பக்கங்களும் உள்ளன)
    - நூல்விவர மெய்ப்பு அட்டவணை இதன் எழுத்துரு வடிவம்
10. **தமிழ்நாட்டில் சாதி சமத்துவப் போராட்டம்** (58 பக்கங்கள், எல்லா பக்கங்களும் உள்ளன)
    - நூல்விவர மெய்ப்பு அட்டவணை இதன் எழுத்துரு வடிவம்
11. **புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும்** (106 பக்கங்கள், எல்லா பக்கங்களும் உள்ளன)
    - நூல்விவர மெய்ப்பு அட்டவணை இதன் எழுத்துரு வடிவம்

பணி முடிந்த மின்னூல்கள்

12. **இந்திய நாத்திகமும் மார்க்சீயத் தத்துவமும்** (50 பக்கங்கள், பணி முடிந்தது)
    - நூல்விவர மெய்ப்பு அட்டவணை இதன் எழுத்துரு வடிவம்
13. **வ. உ. .சி. முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி** (54 பக்கங்கள், இந்நூல் முடிந்தது. வேறுபெயரில் நூல் உள்ளது.)
    - நூல்விவர மெய்ப்பு அட்டவணை இதன் எழுத்துரு வடிவம்

சில பக்கங்கள் இல்லா மின்னூல்கள்

14. **மார்க்சீய சமூக இயல் கொள்கை** (128 பக்கங்கள், சில பக்கங்களில்லை)
    - நூல்விவர மெய்ப்பு அட்டவணை இதன் எழுத்துரு வடிவம்


15. **மக்களும் மரபுகளும்** (196 பக்கங்கள், சில பக்கங்களில்லை)
    - நூல்விவர மெய்ப்பு அட்டவணை இதன் எழுத்துரு வடிவம்
16. **வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப் பாடல்** (214 பக்கங்கள், சில பக்கங்கள் இல்லை)
    - நூல்விவர மெய்ப்பு அட்டவணை இதன் எழுத்துரு வடிவம்
17. **தமிழர் நாட்டுப் பாடல்கள்** (567 பக்கங்கள், சில பக்கங்கள் இல்லை)
    - நூல்விவர மெய்ப்பு அட்டவணை இதன் எழுத்துரு வடிவம்
18. **தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள்** (159 பக்கங்கள், சில பக்கங்கள் இல்லை)
    - நூல்விவர மெய்ப்பு அட்டவணை இதன் எழுத்துரு வடிவம்
19. **பழங்கதைகளும், பழமொழிகளும்** (168 பக்கங்கள், மின்வருடல் சரியில்லை)
    - நூல்விவர மெய்ப்பு அட்டவணை இதன் எழுத்துரு வடிவம்
20. **இலக்கியத்தில் உள்ளடக்கமும் உருவமும்** (121 பக்கங்கள், சில பக்கங்கள் தெளிவாக இல்லை)
    - நூல்விவர மெய்ப்பு அட்டவணை இதன் எழுத்துரு வடிவம்
21. **தமிழர் பண்பாடும் தத்துவமும்** (274 பக்கங்கள், சில பக்கங்கள் இல்லை)
    - நூல்விவர மெய்ப்பு அட்டவணை இதன் எழுத்துரு வடிவம்

ஆங்கில விக்கிமூலத்தில் பேணப்படும் மின்னூல்கள்.

நீங்கள் அங்கு மேம்படுத்த வேண்டுமெனில், கீழுள்ள இணைப்பினைச் சொடுக்கவும்.

Also visit: https://www.commonfolks.in/books/n-vaanamaamalai

en:Index:Studies in Tamil folk literature.pdf - 174 பக்கங்கள் உள்ள ஆங்கில மின்னூல்




வீரபாண்டியக் கட்டபொம்மன் கதைப் பாடல் என்பது பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர் கட்டபொம்மனின் வீரத்தையும், ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டத்தையும் விவரிக்கும் நாட்டுப்புறப் பாடல் ஆகும். நா. வானமாமலை தொகுத்த இந்தப் பாடல், கட்டபொம்மன் ஜாக்சன் துரையைச் சந்தித்தது, பாஞ்சை வளம், மற்றும் இறுதிப் போர் வரை பல நிகழ்வுகளை விளக்குகிறது. இது ஒரு வரலாற்று நாயகனின் வீர காவியமாகும்.

கட்டபொம்மன் கதைப் பாடலின் முக்கிய அம்சங்கள்:

- **பதிப்பாசிரியர்:** நா. வானமாமலை (மதுரைப் பல்கலைக்கழகம், 1971).
- **பொருள்:** கட்டபொம்மன், ஜாக்சன் துரையுடன் நடத்திய பேச்சுவார்த்தை, பாஞ்சை வளம், வெள்ளையர்களுக்கு எதிரான துணிச்சல், மற்றும் இறுதியில் தொண்டைமானால் காட்டிக்கொடுக்கப்பட்டு தூக்கிலிடப்படும் காட்சிகள்.
- **பாணி:** வாய்மொழியாக வழங்கி வந்த கதைகள், பாடல்கள் மூலம் நாடக பாணியில் விவரிக்கப்பட்டுள்ளது.
- **பங்கு:** ஆங்கிலேயர்கள் திரித்து எழுதிய வரலாற்றை முறியடித்து, உண்மையான வீரத்தை வெளிப்படுத்துகிறது.

பாஞ்சாலங்குறிச்சியில் அவர் ஆற்றிய போர்த் திறனும், ஆங்கிலேயர்களுக்கு அடிபணியாத குணமும் இக்கதைப்பாடலில் சிறப்பாகப் பாடப்பட்டுள்ளன.



ஐவர் ராசாக்கள் கதை (பஞ்சபாண்டியர் கதை) என்பது தென்தமிழகத்தில் சிற்றரசர்களாக ஆட்சி செய்த பாண்டிய குல சகோதரர்கள் ஐவரின் வீரத்தையும், வீழ்ச்சியையும் கூறும் ஒரு நாட்டுப்புற வரலாற்று வில்லுப்பாடல் கதையாகும். இவர்கள் ஐந்து கோட்டைகளைக் கட்டி ஆட்சி செய்து வந்தனர். விஜயநகரப் பேரரசின் படையெடுப்பு, கன்னடியன் படைப் போர், மற்றும் வடுக இளவரசி மீதான காதலால் ஏற்படும் சூழ்ச்சிகள் இந்த கதையின் முக்கிய அம்சங்களாகும்.

கதை சுருக்கம்:

- **பின்னணி:** தென் தமிழகத்தில் பாண்டிய சகோதரர்கள் ஐவர் (குலசேகரன், மற்றும் பலர்) தனித்தனி கோட்டைகளை அமைத்து, சுதந்திரமாக ஆட்சி செய்து வந்தனர்.

- **படையெடுப்பு:** அக்காலத்தில் மதுரையை ஆண்ட பாண்டியரை, விஜயநகர பேரரசின் நரச நாயக்கன் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர படை திரட்டி வந்தான்

  .சூழ்ச்சி: வடுக அரசர்கள் பாண்டியர்களின் ஐவர் கூட்டணியை உடைக்க சூழ்ச்சி செய்கின்றனர். குலசேகர பாண்டியனைத் தவிர மற்ற தம்பிகள் கொல்லப்படுகின்றனர்.

- **முடிவு:** குலசேகரன் பிணைக்கைதியாக வடுக இளவரசிக்கு மணமுடிக்கப்படுகிறார், ஆனால் நஞ்சுண்டு தற்கொலை செய்து கொள்கிறார். இந்த செய்தியை அறிந்த வடுக இளவரசி உடன்கட்டை ஏறுகிறாள்.

சிறப்பம்சங்கள்:

- இது 1547-ஆம் ஆண்டிற்கு அருகாமையில் நடந்த வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டது.

- நா. வானமாமலை அவர்களால் தொகுக்கப்பட்டு 1974-இல் மதுரைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டது.

- இக்கதை, கன்னிமாரால் காக்கப்படும் "பெரியதம்புரான்" வழிபாட்டுடன் செவிவழிக் கதையாகவும் மக்களிடையே உள்ளது.



நா. வானமாமலை எழுதிய "**தத்துவ விமர்சனக் கட்டுரைகள்**" (1970கள்), மார்க்சிய ஒளியில் இந்திய மற்றும் தமிழ்நாட்டுத் தத்துவ மரபுகளை விமர்சனப் பூர்வமாக ஆய்வு செய்யும் முக்கிய நூலாகும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடான இந்நூல், மண்ணின் பண்பாட்டு சூழலில் தத்துவங்களின் பயன்பாட்டை ஆராய்கிறது. இது தத்துவ ஆய்வுகளுக்கான விமர்சன அணுகுமுறையை முன்வைக்கிறது.

முக்கிய அம்சங்கள்:

- **ஆசிரியர்:** நா. வானமாமலை.
- **பதிப்பகம்:** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
- **பொருள்:** மார்க்சீய நோக்கில் தத்துவ விமர்சனம்.
- **தன்மை:** 1970களில் 'மார்க்சீய ஒளி' இதழில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பு.




கான்சாகிபு சண்டை (மருதநாயகம் வரலாறு) என்பது 18-ஆம் நூற்றாண்டில் பாளையக்காரர்களை அடக்கி வரி வசூலித்த, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை எதிர்த்த கும்மந்தான் கான்சாகிபு எனப்படும் மருதநாயகத்தின் வீர வரலாற்றைக் கூறும் நாட்டுப்புற கதைப்பாடலாகும். மதுரை, திருநெல்வேலி பகுதிகளில், குறிப்பாகப் பாளையக்காரர்களுக்கு இடையேயான சண்டைகள் மற்றும் ஆங்கிலேயர்களுக்கு எதிரான அவரது போர் உத்திகளை இந்நூல் விளக்குகிறது.

முக்கிய அம்சங்கள்:

- **வரலாற்றுப் பின்னணி:** முகமது யூசப் கான் (மருதநாயகம்) மதுரை மற்றும் திருநெல்வேலியின் ஆளுநராக இருந்து, பாளையக்காரர்களிடமிருந்து வரி வசூலித்த நிகழ்வுகளை விவரிக்கிறது.

- **நாட்டுப்புற இலக்கியம்:** வில்லுப்பாட்டு, கணியான் பாட்டு, கூத்து, மற்றும் லாவணி போன்ற கலை வடிவங்களில் இக்கதைப்பாடல் தென் தமிழகத்தில் பிரபலமாக உள்ளது.
- **ஆய்வு நூல்:** நா. வானமாமலை போன்ற அறிஞர்கள் கான்சாகிபு சண்டையை ஒரு வரலாற்று ஆவணமாக ஆராய்ச்சி நோக்கில் தொகுத்துள்ளனர்.
- **உள்ளடக்கம்:** கான்சாகிபுவின் வீர தீரச் செயல்கள், கட்டபொம்மனின் பாட்டனாரை அடக்கியது, மற்றும் பிரிட்டிஷாருடன் ஏற்பட்ட முரண்பாடுகள் இதில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இந்நூல், பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகத் தன்னைத் தனி அரசராக அறிவித்து, இறுதியில் துரோகத்தால் கொல்லப்பட்ட மருதநாயகத்தின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுகிறது.




பேராசிரியர் நா. வானமாமலை எழுதிய **'இந்திய நாத்திகமும் மார்க்சீயத் தத்துவமும்'** என்ற நூல், இந்திய சிந்தனை மரபில் உள்ள நாத்திகக் கருத்துக்களை மார்க்சியப் பார்வையில் ஆராய்கிறது. இது வேதங்களை மறுத்த சார்வாகம், பௌத்தம், சமணம் போன்ற பண்டைய நாத்திக மரபுகளை, பொருள்முதல்வாத (Materialism) அடிப்படைகளுடன் விளக்கி, மார்க்சிய அறிவியலோடு ஒப்பிடுகிறது.

நூலின் முக்கிய அம்சங்கள்:

- **பண்டைய பொருள்முதல்வாதம்:** பண்டைய இந்தியாவில் இருந்த சார்வாகம் (லோகாயதம்) போன்ற நாத்திகப் பிரிவுகள் கடவுள், ஆத்மா, மறுபிறப்பு, மற்றும் வேத அதிகாரம் ஆகியவற்றை மறுத்தமையை வானமாமலை எடுத்துரைக்கிறார்.
- **மார்க்சியப் பார்வை:** இந்த நாத்திகக் கருத்துக்கள், சமூகப் பரிணாம வளர்ச்சியில் பொருள்முதல்வாதத்தின் ஆரம்ப வடிவங்களாக மார்க்சியத்தின் 'இயக்கவியல் பொருள்முதல்வாத' (Dialectical Materialism) கொள்கையுடன் பொருத்திப் பார்க்கப்படுகின்றன.

- **வரலாற்றுச் சூழல்:** சமய நம்பிக்கைகள் சமூக ஒடுக்குமுறைக்கு எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பதை விமர்சிக்கும் இந்நூல், நாத்திகம் அறிவார்ந்த சுதந்திரத்திற்கான வழியாக வாதிடுகிறது.
- **பௌத்தம் மற்றும் சமணம்:** இவ்விரு மதங்களும் கடவுளை மறுத்தாலும், அவற்றுள் உள்ள தத்துவக் குறைபாடுகளையும், மக்கள் மீதான செல்வாக்கையும் மார்க்சிய நோக்கில் அலசுகிறது.

நா. வானமாமலையின் இந்த நூல், இந்தியத் தத்துவ வரலாற்றை மதச்சார்பற்ற மற்றும் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தில் புரிந்துகொள்ள ஒரு முக்கிய ஆவணமாகத் திகழ்கிறது



இலக்கியத்தில் உள்ளடக்கமும் உருவமும் ஒன்றையொன்று சார்ந்த, பிரிக்க முடியாத இரு கூறுகளாகும். உள்ளடக்கம் என்பது படைப்பின் கருப்பொருள், உணர்வு மற்றும் சமூக யதார்த்தம் (உயிர்); உருவம் என்பது அதன் மொழி, நடை, அமைப்பு மற்றும் பாணி (உடல்). சிறந்த கலைப்படைப்பில் உள்ளடக்கத்திற்கு ஏற்ற உருவம் அமைந்து, வாசகரின் அறிவையும் உணர்வையும் மேம்படுத்துகிறது.

இலக்கியத்தில் உள்ளடக்கம் மற்றும் உருவம் - முக்கிய அம்சங்கள்:

- **உள்ளடக்கம் (Content):** படைப்பாளியின் அகவயக் கருத்துக்கள் மற்றும் புறவய யதார்த்தம் (சமூகச் சூழல்) இலக்கியத்தின் உள்ளடக்கத்தை உருவாக்குகின்றன. இது இலக்கியம் எதைப் பேசுகிறது என்பதைத் தீர்மானிக்கிறது.
- **உருவம் (Form):** இலக்கியப் படைப்பு அமைந்துள்ள வடிவம். இதில் கவிதை, நாவல், நாடகம், கட்டுரை போன்ற அமைப்புகள், பயன்படுத்தப்படும் மொழியின் நடை, படிமங்கள், குறியீடுகள் மற்றும் அணிநயங்கள் அடங்கும்.
- **பரிணாமத் தொடர்பு:** உள்ளடக்கமும் உருவமும் உயிருக்கும் உடலுக்கும் உள்ள உறவு போன்றவை. உள்ளடக்கம் சரியாக

வெளிப்பட உருவம் முக்கியம். சரியான உருவம் இல்லையெனில், உள்ளடக்கம் வாசகனைச் சென்றடையாது.

- ***மார்க்சியப் பார்வை:*** நா. வானமாமலை போன்றோர், உள்ளடக்கத்திற்கேற்ற உருவத்தை மார்க்சிய இலக்கியக் கொள்கையின் அடிப்படையாகக் கருதுகின்றனர். சமூக மாற்றத்தை வலியுறுத்தும் கலைப்படைப்புகளில் இவ்விரண்டும் ஒன்றிணைந்து செயல்படுகின்றன.

நூல் விவரம்:

நா. வானமாமலை எழுதிய "இலக்கியத்தில் உள்ளடக்கமும் உருவமும்" என்ற நூல் இக்கோட்பாடுகளை விரிவாக விளக்குகிறது.

சுருக்கமாக, உள்ளடக்கமும் உருவமும் சேர்ந்துதான் ஒரு முழுமையான கலைப்படைப்பை உருவாக்குகின்றன.



தமிழ்நாட்டில் சாதி சமத்துவப் போராட்டக் கருத்துக்கள், நா. வானமாமலை போன்ற அறிஞர்களால் ஆவணப்படுத்தப்பட்ட, சாதிக் கொடுமைகள், தீண்டாமை மற்றும் நிலவுடைமை வர்க்க சுரண்டலுக்கு எதிரான கலாச்சார மற்றும் சமூகப் போராட்டங்களை மையமாகக் கொண்டவை. இப்போராட்டங்கள் சமூக சமத்துவம், கல்வி உரிமை மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் மாண்பை நிலைநாட்ட வேதங்கள் மற்றும் புராணங்களை பகுத்தறிவுடன் கேள்வி எழுப்பின.

முக்கிய சாதி சமத்துவப் போராட்டக் கருத்துக்கள்:

- ***பகுத்தறிவு மற்றும் விமர்சனம்:*** புராணங்களில் உள்ள முரண்பாடுகளை எடுத்துரைத்து, சாதியக் கட்டமைப்பிற்கு எதிரான கருத்துக்களை முன்வைத்தனர்.

- ***வலங்கை, இடங்கை மோதல்கள்:*** இவை வெறும் சாதிச் சண்டைகள் அல்ல, மாறாக வர்க்க முரண்பாடுகளின் வெளிப்பாடு மற்றும் நிலவுடைமைக்கு எதிரான போராட்டங்கள் என விளக்கப்பட்டது.


- **சாதிய ஆதிக்க எதிர்ப்பு:** பிராமணீய ஆதிக்கத்தை எதிர்த்தல், மாற்று திருமண முறைகளை ஆதரித்தல் மற்றும் கோயில் நுழைவுப் போராட்டங்கள் மூலம் சம உரிமை கோரப்பட்டது.

- **சமூக சமத்துவம்:** அனைத்து மனிதர்களும் சமம் என்ற அடிப்படையில், கல்வி, வேலைவாய்ப்பு, நில உரிமை மற்றும் பொதுச் சேவைகளில் சம வாய்ப்புக்காகப் போராடினர்.

- **மாற்று வழிபாட்டு முறைகள்:** சாதியப் பாகுபாடு அற்ற, வழிபாட்டுச் சுதந்திரம் மற்றும் மாற்றுப் பண்பாட்டுச் அடையாளங்களை வலியுறுத்தினர்.

இந்த போராட்டங்கள், சாதிய அடுக்குமுறைக்கு எதிராக சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, சமத்துவ சமுதாயத்தை நோக்கி மக்களை அணிதிரட்டியன.

தமிழர் நாட்டுப் பாடல்கள் (Folk Songs) என்பவை மக்களின் வாழ்வியலோடு இணைந்து, வாய்மொழியாகக் கடத்தப்படும் கலைப்படைப்புகள். நா.வானமாமலை போன்றோர் தொகுத்த இப்பாடல்கள், தாலாட்டு, காதல், உழைப்பு, விளையாட்டு, மற்றும் தெய்வ வழிபாட்டுப் பாடல்கள் எனப் பல வகைகளில் அமைந்து, தமிழரின் கலாச்சாரம் மற்றும் சமூக வரலாற்றைப் பிரதிபலிக்கின்றன.



தமிழர் நாட்டுப் பாடல்களின் வகைகள்:

- **தாலாட்டுப் பாடல்கள்:** குழந்தையை உறங்க வைக்கப் பாடப்படும் மென்மையானப் பாடல்கள்.

- **தொழிற்பாடல்கள்:** நடவுப் பாட்டு, ஏற்றப் பாட்டு, அறுவடைப் பாட்டு, மீன்பிடிப் பாட்டு போன்றவை உழைப்பின் களைப்பைப் போக்கப் பாடப்படுபவை.


- **விளையாட்டுப் பாடல்கள்:** சிறுவர் சிறுமியர் விளையாடும்போது பாடும் பாடல்கள்.

- **தெய்வப் பாடல்கள்**: கிராம தெய்வங்களை வழிபடும்போது, திருவிழாக்களில் பாடப்படும் கும்மியாட்டம், கரகாட்டம், காவடியாட்டம் சார்ந்த பாடல்கள்.
- **காதல் மற்றும் தெம்மாங்குப் பாடல்கள்**: உணர்வுகளை வெளிப்படுத்தும் எளிய மெட்டுக்களிலானப் பாடல்கள்.
- **வில்லுப்பாட்டு மற்றும் கதப்பாடல்கள்**: மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் கதை, நல்லதங்காள் கதை போன்ற கதை சொல்லும் பாடல்கள்.

சிறப்பம்சங்கள்:

- **வாய்மொழி இலக்கியம்:** எழுத்து வடிவம் பெறாமல் மக்களிடையே வாய்மொழியாகவே பரவியவை.
- **எளிய நடை:** சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய தமிழில் இருக்கும்.
- **வாழ்க்கை முறை:** பிறப்பு முதல் இறப்பு வரை மக்களின் வாழ்வியல், பண்பாடு, மற்றும் உணர்வுகளைப் படம்பிடித்துக் காட்டும்.

முக்கிய தொகுப்புகள்:
பேராசிரியர் நா. வானமாமலை தொகுத்த **'தமிழர் நாட்டுப் பாடல்கள்'** நூல், இத்துறையில் மிகச் சிறந்த ஆவணமாகக் கருதப்படுகிறது. இது நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (NCBH) மூலம் வெளியிடப்பட்டுள்ளது.



நூற்றாண்டு விழா உரையரங்கக் கட்டுரைகள் என்பவை முக்கிய ஆளுமைகளின் நினைவாக, சாகித்திய அகாதெமி போன்ற அமைப்புகளால் தொகுக்கப்படும் ஆய்வுக்கட்டுரை நூல்களாகும். இதில் நா. வானமாமலை (சமூக வரலாறு), கவிஞர் வாணிதாசன், கு.சா. கிருஷ்ணமூர்த்தி போன்றோரின் நூற்றாண்டு விழாக்களில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவை இலக்கியம், பண்பாடு, தத்துவ ஆய்வுகளைக் கொண்டுள்ளன.

முக்கிய நூற்றாண்டு உரையரங்கக் கட்டுரைகள்:

- **நா. வானமாமலை நூற்றாண்டு உரையரங்கக் கட்டுரைகள்**: தொகுப்பாசிரியர் இரா.காமராசு, சாகித்திய அகாதெமி வெளியீடு. இது நா. வானமாமலையின் இலக்கியம், வரலாறு மற்றும் பண்பாட்டு ஆய்வுகளை விவரிக்கிறது.
- **கவிஞர் வாணிதாசன் நூற்றாண்டு விழா உரையரங்கக் கட்டுரைகள்**: சாகித்திய அகாதெமி வெளியீடு, கவிஞரின் படைப்புகள் குறித்த கட்டுரைகள் அடங்கியது.
- **கு.சா. கிருஷ்ணமூர்த்தி நூற்றாண்டு விழா உரையரங்கக் கட்டுரைகள்**: இலக்கியம் மற்றும் சமூக ஆய்வு சார்ந்த கட்டுரைகளை உள்ளடக்கியது.

இந்த நூல்கள் முக்கியமாக CommonFolks, Panuval, Udumalai போன்ற தளங்களில் கிடைக்கின்றன.



பண்டைய வேத தத்துவங்கள் இந்திய தத்துவ சிந்தனையின் அடிப்படையாகும், இவை ஆத்மா (சுய), கர்மா (வேலைகள்) மற்றும் மோட்சம் (விடுதலை) ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றன. இவை ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களின் அடிப்படையில், பிரபஞ்சத்தின் தோற்றம், புருஷா-பிரகிருதி இருமை மற்றும் ஆறு தரிசனங்கள் (யோகா, வேதாந்தம் போன்றவை) மூலம் அறியாமையை நீக்கி உண்மையை உணர்வதை வலியுறுத்துகின்றன.

பண்டைய வேத தத்துவங்களின் முக்கிய அம்சங்கள்:

- **அடிப்படை கருத்தாக்கங்கள்:**
    - **ஆத்மா (ஆன்மா):** உண்மையான சுயத்தை உணர்தல், இது அழியாதது மற்றும் கடவுளுடன் தொடர்புடையது.
    - **கர்மா (செயல்):** செயல்களின் விளைவு மற்றும் பிறவிச் சுழற்சி.
    - **மோட்சம் (விடுதலை):** ஆன்மா பிறவிப் பிணியிலிருந்து விடுதலை பெற்று, பரமாத்மாவுடன் கலத்தல்.

- **வேதங்களின் வகைப்பாடு:** இருக்கு, யஜுர், சாம, அதர்வண வேதங்கள் என நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.
- **படைப்பு கோட்பாடு:** புருஷா (உணர்வு) மற்றும் பிரகிருதி (பொருள்) ஆகிய இரண்டின் சேர்க்கையால் பிரபஞ்சம் படைக்கப்பட்டது என்ற தத்துவம்.
- **அறிவின் முக்கியத்துவம்:** அறியாமையை (அவித்யா) நீக்கி, 'வித்' (அறிவு) மூலம் இறுதி உண்மையை அடைதல்.
- **ஆறு தரிசனங்கள்:** வேதங்களை அடிப்படையாகக் கொண்ட தத்துவ பள்ளிகள், நியாய, வைஷேஷிகா, சாம்க்யா, யோகா, மீமாம்சா மற்றும் வேதாந்தம் ஆகியவை ஆகும்.

வேத தத்துவங்கள் மனித இருப்பு மற்றும் தார்மீக வாழ்விற்கான வழிகாட்டியாகத் திகழ்கின்றன.

அரசியல்

நா. வானமாமலை கல்லூரி படிப்பிற்காக 1936-ம் ஆண்டு மதுரை சென்ற போது அவருக்கு தேசிய விடுதலை போராட்டத்தில் ஈடுபாடு ஏற்பட்டது. வானமாமலை மாணவராக தேசிய இயக்கத்தில் ஈடுபட்டு பின்னர் அதன் இடதுசாரிக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார். 1940 களில் பொது உடைமை இயக்கம் காங்கிரஸ் சோசியலிஸ்ட் கட்சி என்ற பெயரில் இயங்கிக் கொண்டிருந்தது. இக்கட்சி சார்பாக பல இளைஞர் மன்றங்கள் இயங்கி வந்தன. வானமாமலை தன்னை இந்த இளைஞர் மன்றங்களோடு இணைத்துக் கொண்டார். இச்சங்கங்கள் வானமாமலையின் இளமைக்கால சமூகப் பார்வையை விரிவுபடுத்தின.

விவசாய சங்கம்

1947-ம் ஆண்டு விவசாய சங்கம் சார்பில் நாங்குனேரியில் நடந்த கூட்டத்தை பேராசிரியர் ஆர். நல்லகண்ணு அவர்களுடன் சேர்ந்து முன்னால் நின்று நடத்தினார்.

நகராட்சிப் பதவி

1959-ல் பாளையங்கோட்டை நகராட்சி வாரிய உறுப்பினராகப் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டு பணியாற்றினார். இவருடன் சு. பாலவினாயகம், பாளை வக்கீல் என். சண்முகம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். கம்யூனிஸ்ட் கட்சி பெரும்பாண்மை இல்லாத காரணத்தினால் சில திட்டங்கள் மக்கள் நலத் திட்டங்களுக்கு எதிராக சென்றால், "நான் மக்களிடம் செல்வேன்" என சொல்லி பாளையங்கோட்டை கோபாலசுவாமி கோவில் முன் உள்ள திடலில் பொதுக்கூட்டத்தை சு. பாலவினாயகம், என். சண்முகம் ஆகியோருடன் இணைந்து நடத்தி மக்களிடம் பிரச்சனையை விளக்கி அவர்களின் ஆதரவைத் திரட்டினார். இதன் விளைவாக நகராட்சித் தீர்மானங்களில் பல மாற்றங்கள் நிகழ்ந்ததாக அவரது மாணவரும் அவர் வாழ்க்கை வரலாற்றை எழுதியவருமான எஸ். தோதாத்ரி குறிப்பிடுகிறார்.1965-க்குப் பின் பாளையங்கோட்டையில் குடும்பத்துடன் குடியேறியதும் வாரிய உறுப்பினர் பதவிக்கு போட்டியிடுவதை நிறுத்திக் கொண்டார்.

மார்க்சியக் கொள்கைப் பரப்பு

வானமாமலை 1954-ம் ஆண்டிற்கு பிறகு தத்துவம், கலை, இலக்கியம் பகுதியில் ஆர்வம் செலுத்தினார். ஆங்காங்கே தனித்தனியாக நடைபெற்று வந்த மார்க்சியப் பணியை ஓர் அமைப்பாக நெல்லை திரட்டினார். ஆர்.கே. கண்ணன் எடுத்த மார்க்சியப் பயிற்சி வகுப்புகளை விரிவாக எடுக்கச் செய்தார். வானமாமலை தன் மார்க்சியப் பணி பற்றி இப்படி எழுதுகிறார்.

"கேரளத் தோழர்கள் தமிழ் நாட்டிற்கு வந்த அரசியல் வகுப்புகள் எடுத்தார்கள். ஆர். கே. கண்ணன் மிகச் சில தோழர்களுக்கு மார்க்சிய - லெனினிய வகுப்புகள் எடுத்திருந்தார். கட்சியின் ஆரம்ப காலத்தில் நெடுங்காடியும், வி. மீனாட்சிநாதனும் சிறுசிறு வகுப்புகள் எடுத்தார்கள். யாவும் தலைமறைவு நிலைமையில் நடந்தன. படிக்கப் புத்தங்கள் கிடையாது. அச்சடிக்கவும் முடியாது. 1923-1946 வரை இலங்கைக்கு வந்து கொண்டிருந்த மார்க்சியத் தத்துவ நூல்களை 'இன்றைய இந்தியா' போன்ற அரசியல் நூல்களையும் பேட்டையிலிருந்து கொழும்பில் வியாபாரம் செய்து கொண்டிருந்த இடதுசாரி அரசியல்வாதிகள் துரைசாமிச்

செட்டியாரும் கபூரும், சாக்குகளிலும், காலி எண்ணெய் டப்பாக்களிலும் கொண்டு வந்து பரப்பினார்கள். "கம்யூனிஸ்ட் அறிக்கை", "மார்க்ஸ்-எங்கல்ஸ் மார்க்சியம் (லெனின்)", "கம்யூனிசம் என்றால் என்ன?" (ரால் ஃபாக்ஸ்), "அரசும் புரட்சியும் (லெனின்)", "அரசியல் பொருளாதாரம்" (லியன் டியேவ்), "இன்றைய இந்தியா (பாமிடட்)", "காந்தியும் லெனினும் (டாங்கே)" முதலிய நூல்கள் தனித்தனியாகக் கொண்டு வரப்பட்டு இம்மாவட்டத்தில் ஆர்வமுடையவர்களுக்குப் பரப்பட்டன." என்கிறார்.

சிறையில் இருந்த போது சண்முகம் பிள்ளையோடு இணைந்து மார்க்சிய-லெனினிய அகராதி ஒன்றைத் தயாரித்தார். அதில் மார்க்சிய-லெனினிய கலைச் சொற்கள் அனைத்தையும் அகர வரிசைப் படுத்தப்பட்டு ஒவ்வொன்றிற்கும் தமிழ் விளக்கம் அளித்திருந்தார். மூன்று நோட்டுப் புத்தங்களில் எழுதப்பட்டு புழங்கிய அந்த அகராதி அச்சில் இல்லை.

நா. வானமாமலை தலைமையில் நாங்குனேரியில் இருந்து துண்டு பிரசுரங்கள் எழுதப்பட்டன. அவை யாவும் பாதுகாக்கப்படாமல் மறைந்துவிட்டதாக ஆர். நல்லகண்ணு குறிப்பிடுகிறார்.

இந்தி எதிர்ப்பு போராட்டம்

1965-ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் கட்சி இந்தி எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தது. இதில் கல்வி நிலையங்களில் மும்மொழி கொள்கையை எதிர்த்தது. கல்லூரி பேராசிரியர்கள் கல்லூரியில் ஆங்கிலம் இருக்க வேண்டும் என்றும் தமிழில் பயிற்றுவிக்க முடியாது என்றும் தெரிவித்தனார். தமிழில் பயிற்றுவிக்க முடியும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முடிவு எடுத்தபோது பேராசிரியர் வானமாமலை அவற்றை விளக்குவதற்கு பல இயக்கங்களை முன்னின்று வழி நடத்தினார்.

1966-ம் ஆண்டு நியூ சென்சுரி புத்தக நிறுவனம் "தமிழில் முடியும்" என்ற நூலை வெளியிட்டது. இந்நூல் வெளிவருவதற்கு காரணமாக வானமாமலை அமைந்தார். மேலும் அந்நூலின் முக்கியத்துவத்தைக் கூறி மோகன் குமார மங்கலம் எழுதிய கடிதத்தை முன்னெடுத்து இதனை நடைமுறைபடுத்த வானமாமலை பல அறிஞர்களின் உதவியை நாடினார்.

அந்நூலின் முன்னுரையும் இரசாயனம் பற்றிய கட்டுரையும் அவரே எழுதினார்.

சிறை வாழ்க்கை

1948-ம் ஆண்டு நடைபெற்ற நெல்லை சதிவழக்கில் பேராசிரியர் வானமாமலை கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

நில மீட்பு போராட்டத்தில் எஸ். ஏ. முருகானந்தம், ஆர். நல்லகண்ணு ஆகியோருடன் இணைந்து ஈடுபட்டு ஒரு மாதம் சிறையில் இருந்தார். சிறையில் பல தோழர்களுக்கு மார்க்சிய வகுப்புகள் எடுத்தார்.

இலக்கிய வாழ்க்கை

இலக்கிய விமர்சனம்

வானமாமலை 1938-1939 காலகட்டத்தில் வெளிவந்த மணிக்கொடி இதழில் 'இலக்கியம்' என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதினார். உரைநடை இலக்கியத்தைப் பற்றி அவர் எழுதிய ஆரம்பகால கட்டுரைகளில் ஒன்று இது.

நில மீட்பு போராட்டத்தின் போது திவான் ஜர்மன் தாஸ் என்பவர் 'மகாராஜா' என்ற நூலை எழுதினார். இது இந்திய சுதேச மன்னர்களது அந்தப்புர வாழ்வைப் பற்றி எழுதப்பட்ட நூல். வானமாமலை இந்நூலைப் பற்றி பல கட்டுரைகள் எழுதி எஸ்.ஏ. முருகானந்தத்தின் சாந்தி இதழில் வெளியிட்டார். இவை பின் சிறு நூலாக்கப் பட்டன.

நா.வானமாமலை எழுத்து இதழில் புதுக்கவிதை அறிமுகமானபோது அதை கடுமையாக எதிர்த்தவர்களில் ஒருவர். ஆனால் 1970-ல் புதுக்கவிதை மரபு குறித்த ஆய்வுக்கட்டுரையை தாமரை இதழில் எழுதினார். புதுக்கவிதையின் இடது சாரி போக்காக வானம்பாடி இயக்கம் தொடங்கப்பட்டதும் அதை வரவேற்று எழுதினார். இந்த கட்டுரைகள் அனைத்தும் "புதுக்கவிதை - முற்போக்கும் பிற்போக்கும்" என்ற சிறு நூலாக பின்னர் வெளிவந்தன.

1978-ம் ஆண்டு பேராசிரியரின் வெளிவராத பல நூல்கள் வெளிவந்தன. 1980-ம் ஆண்டு மத்திய பிரதேசம் செல்லும் முன் சென்னை கிறிஸ்துவ இலக்கியச் சங்கம் அழைப்பின் பெயரில் தமிழ் நாவல் பற்றிய ஒரு கட்டுரை வாசித்தார். இதுவே அவர் எழுதிய கடைசிக் கட்டுரை.

1946-ம் ஆண்டு 'ஒப்பிலாத சமுதாயம்' என்ற சிறிய நூலை ஜன சக்தி பிரசுராலயத்திற்காக எழுதினார்.இந்நூல்கள் வழியாக முற்போக்கு அழகியலையும், சோஷலிச யதார்த்தவாதத்தையும் முன்வைத்தார்.

மொழியாக்கம்

வானமாமலை ஸ்டீபன் ஹெய்ம்(Stefan Heym) எழுதிய 'The Cosmic Age' என்னும் நூலை 'விண்யுகம்' என்ற பெயரில் மொழி பெயர்த்தார். மேலும் அறிவியல் நூல்களை மொழியாக்கம் செய்துள்ளார்.

குழந்தை இலக்கியம்

நா. வானமாமலை1962-ம் ஆண்டு 'ரப்பரின் கதை' என்ற சிறிய நூலை வெளியிட்டார். இதன் கூட்டாசிரியராக எஸ். தோதாத்ரி இருந்தார். இந்நூல் 1962-ம் ஆண்டு ஜவகர்லால் நேரு பரிசைப் பெற்றது. இதனை எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை (திருநெல்வேலி) நிறுவனத்தினர் வெளியிட்டனர். இதன் பின் 'இரும்பின் கதை', 'காகிதத்தின் கதை', 'பெட்ரோலியத்தின் கதை' என்று பல புத்தகங்கள் வெளிவந்தன.

https://www.hindutamil.in/news/opinion/columns/178979-.html

மக்களின் பேராசிரியர் நா.வானமாமலை



இரா.காமராசு

தமிழில் ஆராய்ச்சிக்கென முதல் பத்திரிகையைத் தொடங்கியவர்!

நா.வானமாமலை நூற்றாண்டு

தமிழ் அறிவுலகில் மக்களிடமிருந்து உருவாகி, கல்விப்புலத்தில் மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டுவந்ததுடன், இறுதிவரையில் மக்களுடனேயே பயணித்தவர்கள் வெகு சிலர்தான். அப்படிக் கல்விப்புலத்துக்கு வெளியே, எவ்வித நிறுவனப் பின்புலமுமின்றி இயல்பாக உருவானவர் நா.வானமாமலை. நீண்ட படைப்பு மரபும், அறிவுத் தொடர்ச்சியும் மிக்க தமிழ் மக்களின் வரலாற்றை, பண்பாட்டை, இலக்கியத்தை அறிவியல் வழிப்பட்ட சமூகவியல் நோக்கில் கண்ட ஆய்வாளர் அவர்!

திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரியில், ஆச்சாரமான வைணவக் குடும்பத்தில் 7.12.1907-ல் பிறந்தவர் நா.வானமாமலை. நாடறிந்த வழக்கறிஞர் என்.டி.வானமாமலை இவரது பள்ளித் தோழர். திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் புதுமுகப் படிப்பையும், மதுரை அமெரிக்கன் கல்லூரியில் இளங்கலை வேதியியல் படிப்பையும் முடித்தார். சென்னை, சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் கல்வியியல் பட்டமும் பெற்றார். பின்னாளில் அமெரிக்கன் கல்லூரிப் பேராசிரியர் கார்மேகக் கோனாரின் வலியுறுத்தலில், முதுகலை படிப்பையும் முடித்தார். 1942 தொடங்கி சில வருடங்கள் ஆசிரியர் பணியில் இருந்தார்.

சமூகப் போராளி

சமூக ஆர்வம் காரணமாகப் பணியிலிருந்து விலகிய அவர், அக்காலகட்டத்தில் முதல் தலைமுறையாகப் படிக்க வந்தவர்களுக்குத் தனிப்பயிற்சி நிலையங்களே துணைநிற்பதை அறிந்து, 1948-ல் பாளையங்கோட்டையில் தனிப்பயிற்சி நிலையத்தைத் தொடங்கினார்.

அதேநேரத்தில், நாங்குனேரி வட்டார விவசாயிகள் இயக்கத்திலும், நெல்லை மாவட்டத் தொழிலாளர் இயக்கத்திலும் செயல்பட்டார்.

கோயில் நுழைவு, சாதிக் கொடுமைகள் எதிர்ப்பு, நில மீட்புப் போராட்டங்கள் ஆகியவற்றில் நா.வா. முன்னின் றார். இதற்காக 1948, 1970 என இருமுறை கைதானார். புகழ்பெற்ற நெல்லைச் சதிவழக்கு விசாரணைக் கைதிகளில் இவரும் ஒருவர். நகராட்சி உறுப்பினராகவும், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாநிலத் தலைவராகவும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலக் கல்விப் பிரிவு பொறுப்பாளராகவும் செயல்பட்டவர்.

தமிழால் முடியும்

அடிப்படையான விஞ்ஞான நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். பல அறிவியல் கட்டுரைகளை எளிமையுடனும் சுவையுடனும் எழுதினார். சிறுவர்களுக் கென 'காகிதத்தின் கதை', 'இரும்பின் கதை', 'ரப்பரின் கதை' முதலிய நூல்களை எழுதினார். 'விண்வெளி ரசாயனம்', 'விஞ்ஞானத் தொழில்நுட்பப் புரட்சியும் அதன் விளைவுகளும்' போன்ற இவரின் அறிவியல் நூல்கள் முக்கியமானவை.

தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் உபவிளைவாக 'அனைத்தும் ஆங்கிலம்' என மாறிய சூழலில், சி.சுப்பிரமணியம், மோகன்குமாரமங்கலம் போன்றவர்கள் தமிழில் அறிவியல் பாடநூல்கள் குறித்து அக்கறை கொண்டனர். அத்தருணத்தில் 'தமிழில் முடியும்' என்னும் தொகுப்பு நூல் ஒன்றை நா.வா. வெளிக்கொணர்ந்தார்.

நாட்டார் வழக்காற்றியல்

முதல் விடுதலைப் போரின் நூற்றாண்டு விழா (1957) கொண்டாடப்பட்டபோது கம்யூனிஸ்ட் தலைவர் பி.சி.ஜோஷி நாட்டுப்புற இலக்கியங்களைச் சேகரிக்கும் பணியை ஒழுங்கமைத்தார். அவரின் ஊக்கத்தால் நா.வா. நாட்டுப்புறப் பாடல்கள் சேகரிப்புப் பணியில் ஈடுபட்டார். அவரின் தலைமையில் தமிழ்நாட்டில் பரவலாக நாட்டுப் புறப் பாடல்கள் சேகரிக்கப்பட்டன. அதற்கு முன்னர் தி.நா.சு., கி.வா.ஜ, செ.அன்னகாமு, பெ.தூரன் போன்றவர்கள் இத்துறையில் ஈடுபட்டிருந்தனர்.

நா.வா. நாட்டுப்புறப் பாடல்களைப் பொருண்மை, நிலவியல், சூழல் அடிப்படையில் வகை தொகைப்படுத்தினார். மேலும் பாடியோர், வழங்கும் இடம், சேகரித்தோர் பெயர் விவரங்களையும் குறிப்பிட்டார். இந்தப் புதிய முறையோடு 'தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள்'(1960), 'தமிழர் நாட்டுப் பாடல்கள்'(1964) ஆகிய தொகுப்புகள் வெளிவந்தன.

'Folklore' என்பது குறித்து தமிழ்ச் சூழலில் பெரும் விவாதம் நடைபெற்றது. 'நாட்டுப்புறவியல்' என்ற கலைச் சொல் உருவானது. நா.வா. 'நாட்டார் வழக்காற்றியல்' என்றார். இந்த இரு சொற்களும் இன்றும் தொடர்கின்றன. நாட்டார் வழக்காற்றியல், மானிடவியல், அடித்தள மக்கள் ஆய்வு போன்ற எதுவுமே முறையாக அறிமுகமாகாத தமிழ்ச்சூழலில் நா.வா. இப்புலத்தில் செயல்பட்டார். நாட்டார் கதைகள், பாடல்களைத் தொகுத்து வெளியிடுவதோடு பலர் நிற்க, இவர் அவற்றின் சமூகப் பெறுமானங்களையும் கவனித்தார். வரலாறு, சமூகவியல், மானிடவியல் ஆகியவற்றின் துணைகொண்டு, ஆய்வுகளை நடத்தினார்.

தொ.பெ.மீனாட்சிசுந்தரம் துணைவேந்தராக இருந்தபோது, நா.வா.வின் கதைப்பாடல் தொகுப்புகளை, மதுரைப் பல்கலைக்கழகம் நூலாக வெளியிட்டது. கட்டபொம்மன் கதைப்பாடல், கட்டபொம்மன் கூத்து, கான்சாகிபு சண்டை, முத்துப்பட்டன் கதை, ஐவர் ராசாக்கள் கதை, காத்தவராயன் கதைப்பாடல் ஆகிய ஆறு நூல்கள் இவ்வாறு வெளியிடப்பட்டன. இவற்றுக்கு நா.வா. எழுதிய ஆய்வு முன்னுரைகள் நாட்டாரியல் ஆய்வுகளுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக இன்றும் திகழ்கின்றன. 1975-ல் வ.அய்.சுப்பிரமணியம் உதவியால் தார்வார், திராவிட மொழியியல் பல்கலைக்கழகத்தில் இவர் ஆய்வுத் தகைமையாளராகத் திகழ்ந்தார். இக்காலத்தில் நா.வா. உருவாக்கிய 'இன்டர்பிரட்டேஷன்ஸ் ஆஃப் தமிழ் ஃபோக் க்ரியேஷன்ஸ்' எனும் ஆய்வு நூல், புதிய வெளிச் சங்களைத் தரவல்லது. இவரின் இந்நூலும் இன்னும் பல கட்டுரைகளும் இன்னமும் தமிழில் வரவில்லை.

1967-ல் 'நெல்லை ஆய்வுக் குழு' என்னும் அமைப்பை உருவாக்கினார். விடாமுயற்சி, படிப்பில் ஆர்வம், ஆய்வு ஈடுபாடு, அறிவியல் நோக்கு, சமூக அக்கறை உடையோர் யாரும் இக்குழுவில் உறுப்பினராகலாம். ஆய்வுக்

குழுக் கூட்டங்களுக்கு நா.வா. தலைமை தாங்குவார். கூட்டச் செலவுகளை அவரே ஏற்பார். கட்டுரைகள் எழுதி வாசிக்கப்பட வேண்டும். விவாதங்கள் நடைபெறும். வெறும் பத்து பேரைக் கொண்டு தொடங்கப்பட்ட இந்த அமைப்பு, நாளடைவில் பாளையங்கோட்டை மட்டுமின்றி, தென்மாவட்டங்களிலும் பரவலாக ஆய்வுக் கூட்டங்களை நடத்தியது. பல துறைகள் சார்ந்து கட்டுரைகள் எழுதப்படுவதும், புதிய அறிவுத் துறை வரவுகள் குறித்த அறிமுகமும் இக்கூட்டங்களில் நடந்தேறின. இந்த ஆய்வுக் குழுவில் பங்கேற்றோர் பலர் இன்று படைப்பு, ஆய்வுத் துறைகளில் சுடர்விடுகின்றனர்.

ஆராய்ச்சி இதழ்

ஆய்வுக் குழுவில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளை வெளியிடவும், தமிழில் ஆய்வுக் களத்தை விரிவாக்கவும் 1969-ல் 'ஆராய்ச்சி' என்னும் ஆய்விதழைத் தொடங்கினார். பல்துறை அறிஞர்களின் கட்டுரைகளுடன் ஆராய்ச்சிக் குழுவினரின் கட்டுரைகளும் இந்த இதழில் வெளிவந்தன. பொருளாதார நெருக்கடியிலும் இறக்கும் வரை அதனை நடத்தினார். இதன் பின்னரே எண்பதுகளில் சமூக, அரசியல், பொருளாதார, ஆய்விதழ்கள் பல வெளிவரத் தொடங்கின. இன்றும் நா.வா.வின் 'புதிய ஆராய்ச்சி'யாக அது வெளிவருகிறது.

தமிழ்மொழி, இலக்கிய ஆய்வுகளை வரலாறு, தொல் லியல், மானிடவியல், சமூகவியல், பண்பாட்டியல் போன்ற பிற துறைகளுடன் இணைந்த பல்துறை கூட்டாய்வுகளாக - தமிழியலாக வளர்த்தெடுத்ததில் நா.வா. முதன்மை யானவர். வரலாறு, பண்பாடு, தத்துவம், இலக்கிய ஆராய்ச்சி ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்த வர், மார்க்ஸியம் கல்விப்புலத்தில் ஒருமுறையியலாக வும், அணுகுமுறையாகவும் இன்று நிலைபெற்றிருப்பதற்கு வித்திட்டவர், நாட்டார் வழக்காற்றியலுக்குத் தமிழ்க் கல்விப்புலத்தில் உரிய அங்கீகாரம் பெற்றுத்தந்தவர் என்று இவரைப் பற்றிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

பிறரை எழுதச்செய்து, சுடர்களேற்றும் சுடராக விளங்கினார். கல்விப்புலத்துக்கு வெளியே ஒரு சிந்தனைப் பள்ளியை அவரால் உருவாக்க

முடிந்தது. எனவேதான் எந்தப் பல்கலை, கல்லூரியிலும் தொழில்முறைப் பேராசிரியராக இல்லாத அவர் 'பேராசிரியர்' என்றே கொண்டாடப்பட்டார்.

- **இரா.காமராசு,** *இலக்கியத் துறைப் பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக்கழகம்,* தொடர்புக்கு: kamarasuera70@gmail.com

வானமாமலை பெருமாள் கோவில்

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%A9%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%AE%E0%AE%B2%E0%AF%88_%E0%AE%AA%E0%AF%86%E0%AE%B0%E0%AF%81%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%B3%E0%AF%8D_%E0%AE%95%E0%AF%8B%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%8D

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற
வானமாமலை பெருமாள் கோவில்



புவியியல் ஆள்கூற்று:	8.491910°N 77.657349°E
பெயர்	
புராண பெயர்(கள்):	நாங்குநேரி, தோத்தாத்ரி, உரோமசேத்திரம், ஸ்ரீவரமங்கை (சீரிவரமங்கல நகர்), நாகணை சேரி

பெயர்:	வானமாமலை பெருமாள் கோவில்
அமைவிடம்	
ஊர்:	நாங்குநேரி, நாங்குநேரி வட்டம்[1]
மாவட்டம்:	திருநெல்வேலி
மாநிலம்:	தமிழ்நாடு
நாடு:	இந்தியா
கோயில் தகவல்கள்	
மூலவர்:	தோத்தாத்திரிநாதன்
உற்சவர்:	தெய்வநாயகப் பெருமான்
தாயார்:	ஸ்ரீதேவி, பூமிதேவி
உற்சவர் தாயார்:	ஸ்ரீவரமங்கை
தல விருட்சம்:	மாமரம்
தீர்த்தம்:	சேற்றுத்தாமரை தீர்த்தம்
மங்களாசாசனம்	
பாடல் வகை:	நாலாயிரத் திவ்யப்பிரபந்தம்
மங்களாசாசனம் செய்தவர்கள்:	நம்மாழ்வார்
கட்டிடக்கலையும் பண்பாடும்	
கட்டடக்கலை வடிவமைப்பு:	திராவிட கட்டிடக்கலை
விமானம்:	நந்தவர்த்தன விமானம்
வரலாறு	

கட்டப்பட்ட நாள்:	18-ஆம் நூற்றாண்டு[சா]

திருவரமங்கை என்னும் **வானமாமலை** என்று அழைக்கப்படும் **நாங்குநேரி வானமாமலை பெருமாள் கோயில்** 108 வைணவத் திருத்தலங்களில் ஒன்றாகும். 108 திவ்ய தேசங்களில் சுயம்பு மூர்த்தியாக பெருமாள் உள்ள எட்டு தலங்களில் இதுவும் ஒன்றாகும். நம்மாழ்வாரால் பாடல் பெற்ற இத்தலம் திருநெல்வேலியிலிருந்து நான்குநேரி செல்லும் சாலையில் அமைந்துள்ளது

திருவரமங்கை என்னும் இத்தலத்திற்கு வானமாமலை, நாங்குநேரி, தோத்தாத்ரி, திருவரமங்கை நகர் என்ற பல்வேறு பெயர்களும் உண்டு. பிரம்மாண்ட புராணம், ஸ்கந்த புராணம், நரசிம்ம புராணம் போன்றவற்றில் இத்தலம் பேசப்படுகிறது. உரோம முனிவர் தவஞ்செய்து திருமாலைக் கண்டதால் உரோமசேத்திரம் என்றும், ஸ்ரீவரமங்கையாக திருமகள் இவ்விடத்தில் வந்து வளர்ந்து பிறகு எம்பெருமானை மணந்து கொண்டதால் ஸ்ரீவரமங்கை (சீரிவரமங்கல நகர்) எனவும், ஆதிசேடன் இங்கு தவமியற்றி திருமாலுக்கு அணையாக இருக்கும் பேறு பெற்றதால் நாகணை சேரி எனவும், மரங்கள் நிறைந்த வனமும் மலையும் சூழ்ந்த இடமாதலின் வானமாமலை எனவும் இங்குள்ள திருக்குளத்தை நான்கு ஏரிகளாக வெட்டியதால் நான்கு + ஏரி= நான்குநேரிஎனவும், அந்த நான்கு ஏரிகளின் கூர்மையான முனைகள் சந்திக்கும் மையப் பகுதியில் அமைந்ததால் நான் + கூர் + நேரி என்பது காலப்போக்கில் நாங்குநேரி என பேச்சு வழக்காயிற்று.

இக்கோயிலில் வானமாமலைப் பெருமாள், திருவரமங்கை தாயார் சன்னதிகள் உள்ளன. இங்குக் கோயில் கல்வெட்டு உள்ளது. இக்கோயிலில் ஏழு நிலை கொண்ட ராஜகோபுரம் உட்பட மொத்தம் ஏழு கோபுரங்கள் உள்ளன. இக்கோயில் முதன்மைத் திருக்கோயில் என்ற வகைப்பாட்டில் இந்து அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. மரபு சாராத அறங்காவலர் அமைப்பால் நிர்வகிக்கப்படுகிறது.

அமைவிடம்

கடல் மட்டத்திலிருந்து சுமார் 122 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள இக்கோயிலின் புவியியல் ஆள்கூறுகள்: 8°29'30.9"N, 77°39'26.5"E (அதாவது, 8.491910°N, 77.657349°E) ஆகும்.

தைலக்காப்பு

இங்கு இறைவனுக்கு தினந்தோறும் தைலக்காப்பு சாற்றும் நிகழ்வு நடைபெறும். அந்த எண்ணெயை எடுத்து இங்குள்ள நாழிக்கிணற்றில் ஊற்றி வருகின்றனர். இந்த நாழிக்கிணற்றில் உள்ள எண்ணெயை நம்பிக்கையுடன் உண்டால் நோய் தீரும் என்பது நம்பிக்கை ஆகும்.

கோயில் தோற்றம் பற்றிய தொன்மவியல்

ஆழ்வார் திருநகரியை ஆண்ட மன்னரான காரிக்கு குழந்தேப் பேறு இல்லாததால், திருக்குறுங்குடிக்குச் சென்று வேண்டினார். மன்னரின் கனவில் தோன்றிய நம்பிராயர் எப்படிபட்ட குழந்தைவேண்டும் என்று வினவினார். அதற்கு காரி தங்களைப்போன்ற ஒரு ஆண்பிள்ளை வேண்டுமென்றார். அவ்வறே ஆகும் என உரைத்த நம்பிராயர், *இங்கிருந்து கிழக்கே சென்றால் நான்கு ஏரிகள் சூழ்ந்த இடத்தில் எறும்புகள் சாரைசாரையாகச் செல்லும். அதற்கு நேர் மேலே கருடன் வட்டமிட்டுக்கொண்டிருப்பான். அந்த இடத்தில் அகழ்ந்தால் வானமாமலை தென்படுவான். அவன் கேட்டதை அருளுவான்* என்றார். அதன்படி அந்த இடத்தைக் கண்டறிந்து அங்கே மன்னன் அகழ்ந்தபோது, அங்கே வானமாமலைப் பெருமாள் கிடைத்தார். நாங்குநேரி என்ற அவ்வூரிலேயே அவரை நிலையாட்டி அவருக்கு கோயில்கட்டி அவரை வழிபட்டார். அதன்பிறகு நம்பிராயர் அருளியபடியே காரி மன்னருக்கு மகனாக நம்மாழ்வார் பிறந்தார்.

கோவில்

கோவில் கருவறையில் ஆதிசேடன் குடையாய் இருக்க, வானமாமலைப் பெருமாள் வைகுண்டபதியாக அமர்ந்த திருக்கோலத்தில் இருக்கிறார். அவருக்கு இருபுறமும் ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி தாயார்கள் காட்சி தருகிறனர். இவர்களுக்கு ஊர்வசியும் திலோத்தமையும் சாமரம் வீசுகின்றனர். பிருகு முனிவர், மார்க்கண்டேய முனிவர், சூரியன், சந்திரன் ஆகியோர் பெருமாளை சேவித்தபடி, கருவறையில் வீற்றிருக்கின்றனர். அர்த்த மண்டபத்தில் கருடாழ்வார், விஷ்வக்சேனர் இருக்கிறார். இந்த

விக்கிரகங்களும் சுயம்புகள் என்றும். வைகுண்டத்தில் பெருமாள் எப்படி வீற்றிருப்பாரோ அத்தகைய கோலத்திலேயே சுவாமி இங்கு இருப்பதாக நம்பிக்கை உள்ளது.

மேலும் கோயிலில் ஞானப்பிரான், லட்சுமி நாராயணர், வேணுகோபாலன், தசாவதார மூர்த்திகள், ராமர், கண்ண பிரான், சக்கரத்தாழ்வார் ஆகியோர் தனிச் சன்னிகளில் உள்ளனர். குலசேகர மண்டபத்தில் நம்மாழ்வாரைத் தவிர 11 ஆழ்வார்களும், கருவறைப் பிரகாரத்தில் 32 ரிஷிகள், தும்பிக்கை ஆழ்வார் ஆகியோரும் உள்ளனர். இத்தலத்தில் உள்ள சேற்றுத் தாமரை தீர்த்தமானது திருப்பாற்கடலின் அம்சமாகவும் சாபம் நீக்கக்கூடியதாகவும் கருதப்படுகிறது.

ஸ்ரீவானமாமலை மடம்

ஸ்ரீவானமாமலை மடத்துக்கு இதுவே தலைமைப்பீடமாகும். இத்தலம் நம்மாழ்வாரால் மட்டும் 11 பாக்களில் பாடப்பெற்றது. இத்தலத்தில் மட்டுமே சடாரியில் நம்மாழ்வாரின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.


பூஜைகள்

இக்கோயிலில் வைகானசம் ஆகம முறைப்படி வழிபாடு நடக்கிறது. சித்திரை மாதம் முக்கிய திருவிழா நடைபெறுகிறது. சித்திரை மாதம் தேரோட்டம் நடைபெறுகிறது. ரை மாதம் திருவிழா நடைபெறுகிறது. வைகானசம் ஆகம முறைப்படி.

108 வைணவ திவ்ய தேச உலா

https://www.hindutamil.in/news/spirituals/915245-108-vaishnava-divya-desa-ula-90-nanguneri-vanamamalai-perumal-temple.html

நாங்குநேரி வானமாமலை பெருமாள் கோயில்



திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் (ஸ்ரீவரமங்கை, வானமாமலை) உள்ள வானமாமலை பெருமாள் கோயில், திருமாலின் மங்களாசாசனம் பெற்ற 108 திவ்ய தேசங்களில் 90-வது திவ்ய தேசம் ஆகும்.

இக்கோயில் மூலஸ்தானத்தில் உள்ள தோத்தாத்ரி நாதர், ஸ்ரீதேவி, பூதேவி, சூரியன், சந்திரன், பிருகுரிஷி, மார்க்கண்டேயர், ஊர்வசி, திலோத்தமை, அர்த்தமண்டபத்தில் உள்ள கருடாழ்வார், விஷ்வக்சேனர் ஆகிய 11 பேரும் சுயம்பு மூர்த்திகளாக உள்ளனர். இங்குள்ள சுயம்புமூர்த்தி பெருமாளை ஆண்டும் முழுவதும் தரிசிக்கலாம்.

இத்தலத்தை நம்மாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார்.

ஏனம் ஆய் நிலம் கீண்ட என் அப்பனே கண்ணா என்றும் என்னை ஆளுடை
வான நாயகனே மணி மாணிக்கச் சுடரே
தேன மாம்பொழில் தண் சிரீவர மங்கலத்தவர் கைதொழ உறை
வானமாமலையே அடியேன் தொழ வந்தருளே

மூலவர்: தெய்வநாதன், வானமாமலை (தோத்தாத்ரிநாதர்)

தாயார்: வரமங்கை,

தலவிருட்சம்: மாமரம்.

தீர்த்தம்: சேற்றுத் தாமரை



ஒரு சமயத்தில் மது, கைடபன் என்ற இரு அரக்கர்களை திருமால் அழித்தார். அவ்வாறு அழித்த சமயத்தில் அரக்கர்களின் துர்நாற்றம் பூமி முழுவதும் வீசியது. பூமாதேவி தனது தூய்மையை இழந்து விட்டதாக வருந்தினாள். எனவே இத்தலத்தில் தவமிருக்கத் தொடங்கினாள். அதன்காரணமாக விஷ்ணுவின் அருள்பெற்றாள். திருமாலும் வைகுண்டத்தில் வீற்றிருப்பது

போல இத்தலத்துக்கு வந்து வைகுண்ட விமானத்தில் ஆனந்த மயமாக அவளுக்கு (பூமி பிராட்டி) காட்சி கொடுத்து அருள்பாலித்தார்.

இத்தலம் நான்கு ஏரிகளால் சூழப்பெற்றுள்ளது. அதனாலேயே நாங்குநேரி ஆனது. ஸ்ரீதேவி, பூமி பிராட்டியுடன் ராஜ தர்பார் கோலத்தில் ஓர் அரசர் போல விற்றிருக்கிறார் பெருமாள். இது இத்தலத்துக்கு உண்டான சிறப்பு ஆகும். பெருமாள் ஒரு கையை பாதத்தை நோக்கியபடியும் மற்றொரு கையை தன் மடிமீது வைத்துள்ளபடியும் அமர்ந்திருக்கிறார். இதற்கு "யார் தன் பாதத்தில் சரண் புகுகிறானோ, அவனுக்கு தன் மடியில் இடம் உண்டு" என்பதாக அர்த்தம் கூறுவர். பெருமாள் கையில் உள்ள பிரத்யேக சக்கரத்தைப் பார்ப்பவர்களுக்கு எதிரிகளே இருக்க மாட்டார்கள் என்பது நம்பிக்கை.

இத்தலத்தில் உள்ள தாயாரின் உற்சவ சிலை முதலில் திருப்பதியில் இருந்தது. அங்குள்ளவர்கள் வேங்கடவனுக்கு ஸ்ரீவரமங்கையை திருமணம் செய்ய இருந்தனர். அப்போது பெத்த ஜீயரின் கனவில் பெருமாள் தோன்றி, "இவள் நாங்குநேரியில் உள்ள வானமாமலை பெருமாளுக்காக இருப்பவள்" என்று கூறியதால் இத்தலத்துக்கு வந்துவிட்டாள்,

அசுர குலத்தைச் சேர்ந்த பெண் மகிஷ்மதி, தன் இரண்டு மகன்களை யாரும் வீழ்த்தி விடக் கூடாது என்று பிரம்மதேவனிடம் இருந்து வரம் பெற்றிருந்தாள். பெற்ற வரம் காரணமாக அனைத்து தேவர்களையும் இந்த இரு அசுரர்களும் துன்புறுத்தி வந்தனர். நாளுக்கு நாள் அவர்களது அக்கிரமங்கள் அதிகரிக்க, பிரம்மதேவன் திலோத்தமையை அழைத்து, இரு அசுரர்கள் முன்னர் நடனமாடும்படி கூறினார். திலோத்தமையும் அவ்வண்ணம் இரு அசுரர்கள் முன்னர் நடனமாடினாள். அப்போது இரு அசுரர்களும், திலோத்தமையை, தானே அடைய வேண்டும் என்று சண்டையிட்டுக் கொண்டனர்.

திலோத்தமையின் நுண்ணிய அறிவினால், இருவரும் ஒருவரை ஒருவர் பலமாக தாக்கிக் கொண்டு மாண்டனர். இதனால் மகிழ்ந்த பிரம்மதேவன், அவள் வேண்டும் வரம் அளிக்க திலோத்தமைக்கு உறுதி அளித்தார்.

திலோத்தமை, தனக்கு எப்போதும் ஸ்ரீமந் நாராயணனுக்கு சேவை செய்யும் வரம் வேண்டும் என்றாள். பிரம்மதேவனும், தான் வரமளித்தாலும், திருமாலைக் குறித்து தவம் இருந்தால் அவள் எண்ணம் ஈடேறும் என்றார். அதன்படி திலோத்தமை, ஊர்வசியை அழைத்துக் கொண்டு திருமாலை நோக்கி தவம் இருந்தாள். இருவரின் தவத்தை மெச்சி அப்படியே ஆகட்டும் என்று நாராயணன் அருள்பாலித்தார், அதன்படியே இருவரும் திருமாலுக்கு வெண்சாமரம் வீசும் பணியை செய்து வருகின்றனர்.

பெருமாள் சுயம்புமூர்த்தியாக அமைந்த எட்டு தலங்களில் வடஇந்தியாவில் உள்ள பத்ரிநாத்தில் ஆறுமாத காலம் கடும் பனியால் கோயில் மூடியிருக்கும். இங்கு ஆண்டு முழுவதும் பெருமாளைத் தரிசிக்கலாம்.

மணவாள மாமுனிகளால் ஸ்தாபிக்கப்பட்ட அஷ்டதிக் கஜங்களில் ஒருவரான வானமாமலை ஜீயர் அவர்களின் தலைமையிடம் இங்கு உள்ளது. இங்குள்ள சடாரியில் சடகோபனின் திருவுருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

மூலவரின் மேல் உள்ள விமானம் நந்தவர்த்தன விமானம் ஆகும். பிரம்மதேவன், இந்திரன், சிந்து நாட்டரசன், கருடன், ஊர்வசி, திலோத்தமை ஆகியோர் இத்தல பெருமாளை தரிசனம் கண்டுள்ளனர்.

இத்தலத்தில் உள்ள ராஜகோபுரம் மிகவும் உயர்ந்து காணப்படுகிறது. கோயிலின் உட்புறத்தில் பந்தல் மண்டபம், பெரிய மண்டபம் உள்ளன. அங்கு தங்கரதம், தங்க சப்பரம் இருப்பதைக் காணலாம். பங்குனி உத்திரத் திருநாளில் தங்கத்தேர் இழுக்கப்படும். திருவிழாக் காலங்களில் செவ்வந்தி மண்டபத்துக்கு உற்சவ மூர்த்திகள் எழுந்தருளி அருள்பாலிப்பார்கள்.

கருவறையில் தோத்தாத்ரி நாதர் பிராட்டியார் இருவருடன் பட்டாபிஷேக திருக்கோலத்தில் வீற்றிருக்கிறார். ஆதிசேஷன் தங்கக் குடை பிடிக்கிறார். கருவறையை சுற்றி வந்தால் 32 ரிஷி, முனிவர்கள், தும்பிக்கை ஆழ்வார் அனைவரும் அருள்பாலிக்கின்றனர்.



வீரப்ப நாயக்கர் மண்டபத்தில் உள்ள சிற்பங்கள் கலைப் பொக்கிஷங்களாகத் திகழ்கின்றன. இக்கலைக் கூடத்தைக் கடந்தால் லட்சுமி வராகர், லட்சுமி நாராயணர், வேணுகோபாலன், தசாவதார மூர்த்திகள் அனைவருக்கும் உள்ள தனிசந்நிதிகளை தரிசிக்கலாம். குலசேகரன் மண்டபத்தில் பதினோரு ஆழ்வார்களை தரிசிக்கலாம். நம்மாழ்வார் சடாரியாக உற்சவரின் முன் உள்ளார். குலசேகரன் மண்டபத்தில் வடக்கு நாச்சியார், தெற்கு நாச்சியார், மணவாள மாமுனிவர், உடையவர் சந்நிதிகள் உள்ளன. மேலும் ராமர், கண்ணன், சக்கரத்தாழ்வார் சந்நிதிகளும் தனித்தனியே உள்ளன.

இத்தலத்தில் பங்குனி, சித்திரை மாதங்களில் பிரம்மோற்சவம் சிறப்பாக நடைபெறும். ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்வர். ஆண்டு முழுவதும் பெருமாளுக்கு நல்லெண்ணெய் அபிஷேகம் நடைபெறும். இந்த எண்ணெயை ஒரு கிணற்றில் ஊற்றி வைப்பார்கள்.

சரும நோய் உள்ளவர்கள் இந்த எண்ணெயை உடலில் தேய்த்து, சில துளிகள் உட்கொண்டால் அனைத்து உபாதைகளும் சரியாகிவிடும்.

அனைத்தும் குணமானதும், பக்தர்கள் கோயில் அலுவலகத்திலேயே நல்லெண்ணெய் வாங்கி அபிஷேகம் செய்வது வழக்கம்.

அமைவிடம்: திருநெல்வேலியில் இருந்து 32 கிமீ தொலைவில் உள்ளது.

அறிந்த கோவில்கள் அறியாத ரகசியங்கள் நாங்குநேரி

https://www.vastushastram.com/%E0%AE%85%E0%AE%B1%E0%AE%BF%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4-%E0%AE%95%E0%AF%8B%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D-%E0%AE%85%E0%AE%B1%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BE%E0%AE

மூல
உற்சவர் பெயர் : ஸ்ரீ தெய்வ நாயக பெருமாள்
தாயார் : ஸ்ரீ வரகுணமங்கை நாச்சியார்,
விமானம் : நந்தவர்த்த விமானம் எனப்படும் வைகுண்ட விமானம்.
தீர்த்தம் : சேற்றுத் தாமரை புஷ்கரணி, இந்திர தீர்த்தம்.
தல விருட்சம் : மா மரம்.
புராண பெயர் : வானமாமலை, திருவரமங்கை
ஊர் : நாங்குனேரி
மாவட்டம் : திருநெல்வேலி

108 திவ்ய தேசங்களுள் சுயம்பு சேத்திரமாக விளங்குவதும், ஸ்ரீ வர மங்கை புரம், தோதாத்திரி புரம், வானமாமலை, உரோமச சேத்திரம், நாகணை சேரி, வர மங்கள சேத்திரம் என்ற சிறப்பு பெயர்களையும் பெற்றது நாங்குநேரி வானமாமலை பெருமாள் கோவில்.

ஸ்தல வரலாறு :

முற்காலத்தில் ஆழ்வார்திருநகரியை ஆட்சி செய்த காரி மாற பாண்டியன் என்ற மன்னன் சிறந்த விஷ்ணு பக்தனாக விளங்கினான். அந்த மன்னனுக்கு திருமணம் ஆகி நீண்ட காலம் ஆகியும் பிள்ளை பேறு கிட்ட வில்லை. தனக்கு பிள்ளை பேறு கிட்ட வேண்டி மன்னன் பல்வேறு தானங்கள்,

தர்மங்கள் மற்றும் யாகங்களை செய்து வந்தான். ஒரு நாள் அந்தணர் ஒருவர் காரி மாற பாண்டியனை சந்திக்க, அவரிடம் தன் குறையை மன்னன் கூறினான். அதற்கு அந்த அந்தணர் திருக்குறுங்குடி சென்று நம்பி பெருமாளை தரிசனம் செய்து வழிபட்டால் வழி பிறக்கும் என கூறினார்.

அந்தணரின் ஆலோசனை படி மன்னனும், தன் மனைவியை அழைத்துக் கொண்டு திருக்குறுங்குடி தலத்திற்கு சென்று நம்பிராயரை மனமுறுகி வணங்கி தனக்கு ஒரு ஆண் மகவு பிறக்க அருள் செய்யும் படி வேண்டி கொள்கிறார். அன்று இரவு காரி மாற பாண்டிய மன்னரின் கனவில் தோன்றிய நம்பிராயர் பெருமாள், திருக்குறுங்குடி நகரில் இருந்து கிழக்கே நான்கு ஏரிகள் சூழ்ந்த இடத்தின் மத்தியில் எனது சகோதரனான வானமாமலை பெருமாள் தனது பரிவாரங்கள் சகிதமாக பூமிக்கு அடியில் புதையுண்டு கிடக்கிறார் எனவும் நீ அங்கு சென்று காணும் போது அந்த இடத்தை எறும்புகள் சாரை சாரையாக ஊர்ந்து செல்லும், வானில் அதற்கு நேராக கருடன் வட்டமிட்டு கொண்டிருக்கும் எனவும் கூறி, அந்த இடத்தை தோண்டி அங்கு புதையுண்டு கிடக்கும் சுயம்பு மூர்த்திகளை பிரதிஷ்டை செய்து திருக்கோவில் கட்டி வழிபட்டால் உன் விருப்பம் நிறைவேறும் எனவும் கூறி அருளுகிறார்.

அதன் படி காரி மாற பாண்டியனும் அந்த இடத்திற்கு சென்று அடையாளம் கண்டு, பூமியை தோண்டிட அங்கிருந்து குருதி பெருக்கிட பதினொரு சுயம்பு திருமேனிகள் கிடைக்கிறது. அந்த சுயம்பு திருமேனிகளை பிரதிஷ்டை செய்து திருக்கோவில் எழுப்பி முறைப்படி கும்பாபிஷேகம் செய்து வைத்திட, அவனுக்கு அவனது விருப்பப்படி நம்மாழ்வாரே ஆண் மகனாக அவதரித்தார் என்று வரலாறு கூறப்படுகிறது.

பூமா தேவிக்கு அருள்புரிந்த வரலாறு:

முற்காலத்தில் மது, கைடபர் என்ற இரண்டு அசுரர்கள் இருந்தார்கள். இவர்கள் இருவரும் தேவர்களை மிகவும் கொடுமைப்படுத்தி வந்ததோடு மட்டுமல்லாமல் படைக்கும் கடவுளான பிரம்மனிடம் இருந்த வேதங்களையும் கவர்ந்து சென்றார்கள். வேதங்களை இழந்த பிரம்மன் படைப்பு தொழிலை செய்வதில் சிரமப்பட, தேவர்களும் துன்புறுத்தப்பட இறுதியில் மகா விஷ்ணு அந்த இரண்டு அசுரர்களோடு போர்க்களத்தில் போர் புரிந்து தன் கடாயுதத்தால் இருவரையும் சம்ஹாரம் செய்கிறார். மது, கைடபர் இருவர் உடம்பிலும் இருந்த இரத்தமானது இப் பூமி முழுவதும் பரவி கடும் துர் நாற்றம் வீசியது. இதனால் பூமா தேவி நிலை குலைந்து

போனாள். தன் நிலை மாற பூலோகத்தில் மகா விஷ்ணு சுயம்புவாக தோன்றிய தோதாத்திரி தலத்தை அடைந்து தவம் இயற்றுகிறாள். அவளின் தவத்தை மெச்சிய பெருமாள் அவளுக்கு காட்சி கொடுத்து, தனது சக்ர ஆயுதத்தை வானில் உள்ள மேகக் கூட்டங்களுக்கு நடுவே பிரயோகித்து, அமிர்த மழை பொழிய வைக்கிறார். வானில் இருந்து அமிர்த மழை பொழிந்த போது பூமி எங்கும் அந்த அமிர்த நீர் பரவி பூமியை சுத்தப்படுத்திட பூமா தேவி புதுப் பொலிவை பெற்றாள் என கூறப்படுகிறது.

கோயில் சிறப்புகள்:

- நெல்லை மாவட்டத்தில் உள்ள இந்த ஊரில் உள்ள ஒரு குளம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளதால், இவ்வூர் நான்கு ஏரி என்றழைக்கப்பட்டது. அந்தப் பெயர் மருவி 'நாங்குநேரி' என்று மாறியதாகச் சொல்வார்கள். அல்லது, அந்த நான்கு ஏரிகளின் கூரிய முனைகள் சந்திக்கும் மையப் பகுதி ஆதலால், நான்கு கூர் ஏரி என்று இவ்வூர் அழைக்கப்பட்டு, காலப்போக்கில் 'நாங்குநேரி' என்று ஆனதாகவும் சொல்வார்கள்.

- பெரும்பாலும் கோவில்களில் ஒரு சுயம்பு மூர்த்தி இருப்பதை பார்த்திருப்போம். ஆனால் இந்த கோவிலில் 11 சுயம்பு மூர்த்திகள் காட்சி தருகிறார்கள்.

- தோத்தரிநாதர், ஸ்ரீதேவி, பூதேவி, சூரியன், சந்திரன், பிருகுரிஷி, மார்க்கண்டேயர், ஊர்வதி, திலோத்தமை, கருடாழ்வார், விஷ்வக்சேனர் என 11 பேர் சுயம்பு மூர்த்திகளாக உள்ளனர்.

- பெருமாள் சுயம்புமூர்த்தியாக அமைந்த எட்டு தலங்களில் வடஇந்தியாவில் உள்ள பத்ரிநாத்தில் ஆறுமாத காலம் கடும் பனியால் கோயில் மூடியிருக்கும். இங்கு ஆண்டு முழுவதும் பெருமாளைத் தரிசிக்கலாம்.

- இங்குள்ள தாயாரின் உற்சவர் சிலை முதலில் திருப்பதியில் தான் இருந்ததாம். அங்குள்ளவர்கள் திருவேங்கடப் பெருமாளுக்கு ஸ்ரீவரமங்காதேவியை கல்யாணம் செய்ய இருந்தனர். அப்போது பெரிய ஜீயரின் கனவில் பெருமாள் தோன்றி, “” இவள் நாங்குநேரியிலுள்ள வானமாமலை பெருமாளுக்காக இருப்பவள்,” என கூறியதால் இத்தலத்திற்கு வந்து விட்டாள்.மணவாள மாமுனிகளால் ஸ்தாபிக்கப்பட்ட அஷ்டதிக் கஜங்களில் ஒருவரான வானமாமலை ஜீயர் அவர்களின் தலைமையிடம் இங்கு உள்ளது. இங்குள்ள சடாரியில் சடகோபனின் திருவுருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

- இங்கு ஆண்டு முழுவதும் பெருமாளைத் தரிசிக்கலாம். ஆண்டு முழுவதும் பெருமாளுக்கு நல்லெண்ணெய் அபிஷேகம் நடக்கும்.

- இந்தக் கோயிலின் கருவறையில், இறைவன் தோத்தாத்ரி நாதர் தனது இடது காலை மடித்த நிலையில் வலது காலை தொங்கவிட்டுத் தரையில் படும்படியாக வீற்றிருக்கிறார். அதனால் இந்தக் கோயில் பூலோக வைகுண்டம் என்றும் அழைக்கப்படுகிறது

- இத்திருத்தலத்தை பற்றிய செய்திகள் பிரம்மாண்ட புராணம், கந்தபுராணம் மற்றும் நாரத புராணங்களில் இடம் பெற்றுள்ளன. லட்சுமி தாயார் இத்திருத்தலத்தில் குழந்தையாக பிறந்ததால், இத்திருத்தலம் வரமங்கை என்றும் அழைக்கப்படுகிறது. ஆதிசேஷன் இத்திருத்தலத்தில் தவமிருந்து மகாவிஷ்ணுவை சுமக்கும் பாக்கியம் பெற்றான். கருடாழ்வாரும் இங்கு தவம் இயற்றி வைகுண்ட வாசலில் நிற்கும் பேறு பெற்றார்.

- இங்கு தை மாதம் அமாவாசை அன்று நடைபெறும் “ஒரு கோட்டை எண்ணெய் காப்பு” உற்சவம் பிரசித்தி பெற்றதாகும். அன்று செக்கில் ஆட்டப்பட்ட சுமார் 210 லிட்டர் தூய நல்லெண்ணையை வெள்ளி வட்டிலில் சேகரித்து மூலவர் பெருமாளுக்கு காப்பு செய்வார்கள்.

தொடர்ந்து விசேஷ சங்காபிஷேகமும், திருமஞ்சனமும் நடைபெற்று மூலவருக்கு சந்தனக் காப்பு சாத்தப்படும்.

- வைணவ கோவில்களில் நம்மாழ்வாருக்கு பிரதானமாக சன்னதி இருக்கும். ஆனால் இங்கு காரி மாறன் வழிபட்ட பின்னரே நம்மாழ்வார் அவதாரம் நிகழ்ந்ததால், இங்கு நம்மாழ்வாருக்கு தனி சன்னதி இல்லை. இங்குள்ள பெருமாளின் சடாரியில் நம்மாழ்வார் எழுந்தருளி நித்ய வாசம் புரிகிறார் என்பது சிறப்பம்சம் ஆகும்.

திருவிழா:

பங்குனி, சித்திரை மாதங்களில் நடக்கும் பிரம்மோற்ஸவம் இத்தலத்தில் மிக முக்கிய திருவிழாக்கள் ஆகும்.

திறக்கும் நேரம்:

காலை 7 மணி முதல் 12 மணி வரை, மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை திறந்திருக்கும்.

முகவரி:

அருள்மிகு **வானமாமலை பெருமாள்** திருக்கோயில்
நாங்குனேரி-627108
திருநெல்வேலி மாவட்டம்

போன்:

+91- 4635-250 119

கோவில் அமைவிடம் :

திருநெல்வேலி – நாகர்கோவில் நெடுஞ்சாலையில் திருநெல்வேலியில் இருந்து சுமார் 26 கி. மீ தொலைவில் அமையப் பெற்றுள்ளது நாங்குநேரி கோவில். இங்கு செல்ல திருநெல்வேலியில் இருந்து நாகர்கோவில் செல்லும் பேருந்துகளில் ஏறியும், தனியார் வாகனங்களிலும் சென்றடையலாம்.

நா.வா. பணியும் பண்பும்

https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/unnal-naalaam

(நா.வா. மணிவிழா ஆண்டு மலரில் இடம்பெற்ற கட்டுரை)

ப.மாணிக்கம்

தோழர் வானமாமலை தமது 59 ஆண்டுகளைக் கடந்து 60ஆம் ஆண்டைத் துவக்கியுள்ளார். அவரது அரசியல் கலை, இலக்கிய, ஆராய்ச்சிப் பணிகளை முறையாக மதிப்பிடுவது எனக்கு முடியாத காரியம். எனக்குத் தெரிந்த சில அம்சங்களை என் சிந்தனையில் அழுத்தமாக நிற்கும் சில நினைவுகளை இதில் குறிப்பிட்டுள்ளேன்.

அரசியல் துறை

அவருடன் எனக்கு முதல் பரிச்சயம் 1944ல் ஏற்பட்டது என நினைவு. அதற்கு முன்னதாகவே அவரைப் பற்றிச் சில தோழர்கள் மூலம் கேள்விப் பட்டிருந்தேன். அவரை எனக்கு நேரில் முதல் முதலாக அறிமுகம் செய்தவர் தோழர் பாலதண்டாயுதம் ஆவார். அம்பாசமுத்திரத்தில், பாப்பான்குளம் சொக்கலிங்கம்பிள்ளை வீட்டிற்குச் சென்ற நேரத்தில் (1945ல்) தோழர் பாலனுடன் வானமாமலையும் வந்திருந்தார். அச்சமயம் தோழர் வானமாமலை மொழிபெயர்த்திருந்த ஒரு நூல் ‘ஒப்பில்லாத சமுதாயம்’ (டீன் ஆப் கான்டர் பரி, ஹியூ லட் ஜான்சன் எழுதியது) வெளிவந்ததை வாசித்து அறிந்திருந்தேன். அதனால் அவரை அறிமுகம் செய்ததும் அவரது அமெரிக்கன் கல்லூரி வாழ்க்கை, ஆசிரியர் தொழில் பற்றிப் பேசிவிட்டு எனது வேலையில் முனைந்து விட்டேன். பின்னர் தோழர் பாலன் வானமாமலை பற்றி எனக்கு விவரமாகக் கூறினார். எனது அரசியல் வாழ்க்கையில் ஏற்பட்ட சில மாறுதல் களால் நான் அவரைத் தொடர்ந்து ஓரிரு ஆண்டுகள் பார்க்க வில்லை. பின்னர்

1948ஆம் ஆண்டு துவக்கத்தில் அவரைச் சந்தித்தேன். இதற்குப் பின்னர் எனது தொடர்பு இடையறாதது.

சுமார் 30 ஆண்டுகளில் கடந்த 14 ஆண்டு களாக நான் சென்னையில் வாழ்ந்த போதிலும் அவருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கிறேன். 1948 முதல் 1962 முடிய 15 ஆண்டுகளில் அவருடன் அரசியல், தத்துவார்த்தப் பிரச்சனைகளோடு, சொந்தப் பிரச்சனைகளையும் விவாதித்துள்ளேன். எனது உடல்நலம் பாதித்திருந்த காலத்தில் அவருடைய உதவி எனக்குக் கிடைத்தது. ஒரு கம்யூனிஸ்ட் ஊழியனைக் காப்பாற்றுவதில் அவருக்கிருந்த அக்கறை, பண்பு ஆகியவற்றை அனுபவித்து உணர்ந்தவன் என்ற முறையில் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். சோதனைகள் மிக்க நேரத்தில் அரசாங்க அடக்குமுறை இருந்த காலத்தில் கலக்கமில்லாமல் உதவி செய்த உறுதிமிக்க கம்யூனிஸ்ட் அவர்.

அவரையே சிறையில் தள்ளி 1949ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சில நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தினார்கள். அப்போதும் அவர் கம்யூனிஸ்ட் கட்சியை விட்டதில்லை. அவர் சிறை வாழ்க் கையில் எத்தகைய அசௌகரியத்தையும் சுலபமாகச் சமாளித்தார். அவரோடு சிறையிலிருந்த வழக்கறிஞர் தோழர் வானமாமலை கூறினார் "என்.வி. சிறை வாழ்க்கையில் மிகச் சுலபமாக தனது வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டார். எங்களுக் கெல்லாம் புதிய அனுபவம், சிரமமாக இருந்தது" என்று பாராட்டுத் தெரிவித்தார்.

இவர் மீது விமர்சனம் வரும் போதெல்லாம் கலங்காது தனது குறையை உணர்ந்து அவர் மிக நிதானமாக நடந்து கொண்டார். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் பலர் உணர்ச்சிவசப்படுவதையும், குரோத உணர்ச்சி கொள்வதையும், கட்சி நலனைக் கைவிட்டதையும் பார்த்திருக்கிறேன். முற்றிலும் மாறுபட்ட நிலையில் கட்சி உணர்வுடன் அவர் நடந்து கொண்டதை மறக்க முடியாது.

இத்தகைய ஆழ்ந்த கட்சிப் பற்றும், கம்யூனிஸ்ட் லட்சியங்கள் மீதுள்ள தெளிவும், உறுதியான பிடிப்பும் அவரைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஈடுபடுத்தி வருகிறது.

பலதுறை ஆர்வம்

தோழர் வானமாமலைக்கு விவசாய இயக்கத்தில் அக்கறை இருந்தது. இதன் காரணமாக தோழர் நல்லகண்ணுவை நாங்குனேரி தாலுகாவிற்குத் தோழர் பாலன் மூலம் முயற்சித்துக் கொண்டு வருவதில் அக்கறை காட்டினார். நாங்குனேரி தாலுகா விவசாய இயக்கம், நாங்குனேரி இளைஞர் மன்றம் ஆகியவற்றில் அக்கறை காட்டிச் செயல்பட்டார்.

கட்சிக்கு அரசியல் ஊழியர்களைத் தயாரிப்பதில் எப்போதும் முயற்சி செய்வார். இன்றும்கூட பல இளைஞர்களைக் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு அவர் பயிற்றுவித்துள்ளார். இத்துறையில் அவரது பங்கு நெல்லை மாவட்ட கம்யூனிஸ்ட் இயக்கத் திற்குப் பெரிதும் உதவியுள்ளது. மாவட்டத் தலைமையிலும், மாவட்டத்தின் பல பகுதிகளிலும் அவரது மாணவர்கள் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் வேலை செய்கிறார்கள்.

மார்க்சீய போதனையைத் தொழிலாளர், விவசாயிகளுக்கு அளிப்பதில் கடந்த பல ஆண்டு களாக அவர் ஆற்றியுள்ள பணி மறக்க முடியாதது. இத்துறையில் அவரது உதவி நெல்லை மாவட்டக் குழுவுக்கும் தமிழக கம்யூனிஸ்ட் கட்சிக்கும் தொடர்ந்து கிடைத்து வருவது கட்சிக்கு நல்ல பலனை அளித்துள்ளது.

கட்சிக்கு நிதி அவசரமாகத் தேவைப்பட்ட போதெல்லாம் உதவியுள்ளார். கட்சி வேலைகள் தொடர்ந்து நடைபெற பல சந்தர்ப்பங்களில் அவர் உதவியுள்ளார். இன்றைய சூழ்நிலையில் அதன் அருமையைச் சிலர் உணர முடியாமல் போகலாம். அடக்குமுறை, தலைமறைவுக் காலம், பின்னர் கட்சியைப் புனரமைத்த காலங்களில் அவரால் முடிந்த உதவியெல்லாம் தந்துள்ளார். கட்சியின் அமைப்பு ஜீவனுடன் இயங்க வேண்டும் என்கிற ஆழ்ந்த உணர்வுடன் அவர் சரளமாக இந்த உதவி களைச் செய்துள்ளார். இவைகளில் விளம்பரம், படாடோபம் இருந்ததில்லை. இயற்கையான செயலாகவே அவைகளைச் செய்து வந்துள்ளார்.

கம்யூனிஸ்ட் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு முறையான கல்வியைத் தரவும் அவர் தயங்கிய தில்லை. பல கம்யூனிஸ்ட் ஊழியர்கள், தங்கள் பிள்ளைகளைச் சரிவர கவனிக்க முடியாது கடந்த காலத்தில்

செயல்பட்டுள்ளனர். அச்சந்தர்ப்பங்களில் அவர்களது பிள்ளைகளுக்குக் கல்வி தந்து தேர்வில் வெற்றிபெற உதவியுள்ளார். கட்சி ஊழியர்களின் பிள்ளைகளின்மீதும் அவர் காட்டிய அக்கறை மிகச் சிறந்த கம்யூனிஸ்ட் பண்பு ஆகும். கம்யூனிஸ்ட் ஊழியர்களின் குடும்பங்களுக்கும் அவரால் முடிந்த போதெல்லாம் உதவியுள்ளார்.

இத்தகைய பல்துறை கவனத்துடன் அவர் தனது அரசியல் வாழ்க்கையில் நடந்து வருகிறார். இப்படிப்பட்ட பண்புகளை கம்யூனிஸ்டுகள் பெறுவது அவசியம். தோழர் வானமாமலை ஒரு நல்ல முன்னுதாரணம், பின்பற்ற வேண்டிய உதாரணம்.

கலை, இலக்கியத்துறை

தமிழகத்தில் கலை, இலக்கியப் பெருமன்றம் உருவாக தோழர் ஜீவா, ரகுநாதன் ஆகியோரோடு துணைநின்று செயலாற்றினார். கலை, இலக்கிய நோக்கு எப்படி அமைய வேண்டும் என்னும் கொள்கை அறிக்கையை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தார்.

நெல்லை மாவட்டத்தில் கார்க்கி கலைக்குழு, நாடக மன்றங்கள் ஆகியவற்றிற்கு ஊக்கமளித்துச் செயல்பட்டுள்ளார்.

இலக்கியகர்த்தாக்களிடம் கொள்கை விவாதம் நடத்தி, தெளிவை ஏற்படுத்தியும், இளம் எழுத்தாளர் களை உருவாக்கியும் வந்துள்ளார். அதி தீவிரக் கருத்தோட்டத்தில் புதுமை, புதுமை என புதுமையை வணங்கிவிட்டு, சிறந்த பண்புகளைப் பார்க்க மறந்துவிட்ட, மறுத்துவிட்டவர்களைச் சரியான வழிக்குக் கொண்டு வருவதில் விசேச முயற்சி களைச் செய்து வெற்றி கண்டுள்ளார்.

கிராமியக் கலை எனப்படும் மக்கள் கலையை, கிராமியப் பாட்டுகள், இலக்கியம் எனப்படும் மக்கள் இலக்கியம், பாட்டு இவைகளைச் சேகரித்து அதன் சமூக உள்ளடக்கங்களைப் புலப்படுத்தி அதன் சிறப்பை உலகம் உணரச் செய்தவர் தோழர் வானமாமலை. இதற்கு இந்தியா, உலகு தழுவிய அங்கீகாரம் அவருக்குக் கிடைத்துள்ளது. இது ஒரு மாபெரும் சாதனை.

இத்துறையில் பல இளம் அறிஞர்களை ஈடுபடுத்தி இத்துறையை விரிவடையச் செய்துள்ளார்.

தொல்பொருள் ஆராய்ச்சியை வரலாற்றுக்கு மட்டுமல்ல, கலை இலக்கியப் பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாத்து, வளர்க்க வழிகாணும் முறையில் அதனைப் பயன்படுத்தியுள்ளார். இதற்கு அவருக்கு மார்க்சீய ஞானம் துணை புரிந்துள்ளது. சொல்லப் போனால் மார்க்சீய விஞ்ஞானத்தைத் திறம்படப் பயன்படுத்தி கலை இலக்கியத் துறையை வளப் படுத்தியுள்ளார்.

ஆராய்ச்சித்துறை

இத்துறையில் அவருக்குப் பொது ஆர்வம் பல ஆண்டுகளாக இருந்து வந்துள்ளது. அவர் எந்த நூலைப் படித்தாலும் அதன் உட்கருத்தையும் அதன் கருப்பொருளையும் புரிந்து கொள்வதில் அசாத்திய திறமை பெற்றிருந்தார்.

மார்க்சீய நூல்களைக் கற்பதில் இடையறாத ஆர்வமிருந்தது அவருக்கு. கட்சி அரசியலைப் புரிந்து கொண்டு மக்களுக்குச் சிறந்த முறையில் சேவை செய்ய தன்னால் முடிந்ததைச் செய்ய வேண்டும் எனும் ஆர்வம் அவருக்கிருந்தது. இது போன்றே பலரைக் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்குத் தயாரிக்க வேண்டும் எனும் ஆழ்ந்த அக்கறை இருந்தது. இதன் காரணமாக அவர் மக்கள் வாழ்க் கையில் ஏற்படும் இன்ப துன்ப நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனிக்கும் ஆற்றல் பெற்றிருந்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் கிராமப்புற விழா நிகழ்ச்சி களைப் பற்றி நான் அவருடன் பேசிக் கொண் டிருந்தேன். குறிப்பாக தாழ்த்தப்பட்ட அரிஜன மக்கள் வீர வணக்கம் செய்யும் முறையில்

தங்களது சொந்தக் கடவுள்களை வணங்குவது பற்றி விவாதித்தேன். அவர் வீர வணக்கத்தின் பின்னணியை எனக்கு விளக்கினார். கிராமப் புறங்களில் மேல் ஜாதியினருக்கும் தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்குமிடையில் ஏற்படுகின்ற மோதுதல் சமூக உணர்ச்சிகள், ஜாதீய மனோ பாவங்கள் பற்றி விவாதித்தேன். இதற்கும் அரிஜன மக்கள் வணங்கும் வீரக் கடவுள்களுக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது என எனது சந்தேகத்தைக் கிளப்பினேன். இதுபற்றி விவர பூர்வமாக

ஆராய்வது அவசியம் எனக் கூறினார். இப்பொழுது தமது ஓராண்டு ஆய்வுப் பணியில் இதைப் பற்றி ஆராய்ந்து தமது ஆய்வு நூலில் எழுதியுள்ளார்.

நாட்டுப்பாடல் துறையில் நா.வா. ஈடுபட்ட சந்தர்ப்பம் வருமாறு: தோழர் வானமாமலைக்கு உழைக்கும் மக்கள் பால் உள்ள அன்பும் அவர்களது கலை உணர்வு, வாழ்க்கைப் போராட்டங்கள் ஆகியவை பற்றி இருந்த ஞானமும், வரலாறு பற்றிய சர்ச்சைகள் ஆகியவையும் சேர்ந்து சமூக இலக்கியங்கள், கிராமியப் பாடல்கள் ஆகிய வற்றில் ஆராய்ச்சி வேண்டும் என்கிற எண்ணத்தை உருவாக்கியது.

இதன் விளைவாக கிராமியப் பாடல்கள் திரட்டு, கட்டபொம்மன் வரலாறு, முத்துப்பட்டன் பாட்டு, நல்லதங்காள் கதை போன்றவைகளை ஆழ்ந்து கற்றுணர்ந்து, இப்பாடல்களில் காலம், சமூகப் பின்னணி, இதன் சமூக உள்ளடக்கம் பற்றி யெல்லாம் விளக்கமாக நூல் வடிவில் கொண்டு வந்தார்.

இதையொட்டியே மக்கள் வரலாற்றில், பண் பாட்டில் அதிக அக்கறை அவருக்கு வளர்ந்தது. தொல்பொருள் ஆராய்ச்சி முடிவுகளைக் கற்றுத் தேர்வதில் அக்கறை செலுத்தினார்.

கிராமப்புறத்தில் விவசாயிகள் தங்கள் நல் வாழ்வுக்காக நடத்திய பல போராட்டங்கள் பற்றி அவர் ஆராய்ந்தார். பிற்காலச் சோழர்கள் காலத்தில் நடந்த விவசாயிகளின் போராட்டம் பற்றி அவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை உலக அறிஞர் களின் பாராட்டுதலைப் பெற்றுள்ளது.

இந்தியத் தத்துவம், பண்பாட்டியல் ஆகிய வற்றில் அவரது ஆராய்ச்சி தரமானவை.

வேதாந்த பிரபஞ்சம் என்னும் நூலுக்கு (Universe of Vedantha) அவர் எழுதிய விமர்சனம் மார்க்சீய விஞ்ஞானத்திலும், இயற்கை விஞ்ஞானத்திலும் அவருக்குள்ள ஆழ்ந்த அறிவை மட்டுமல்ல வரலாற்றுணர்வையும் புலப்படுத்துகிறது.

அவரது ஆராய்ச்சி உணர்வு மிகப் பரந்தது. இதன் பிரதிபலிப்பே 'ஆராய்ச்சி' காலாண்டு இதழாக வெளிவருகிறது. இத்தகைய துணிச்சலான கன்னி முயற்சியில் தனிநபர் ஈடுபடுவது தமிழகத்தில் இதுவே முதல் தடவை ஆகும்.

செல்வ வளம் பெற்றவரல்லர், இருப்பினும் இந்த முயற்சி கண்டு நானும், வேறு சில தோழர் களும் அச்சம் கொண்டோம். வானமாமலையின் அறிவுத் துணிச்சல் வென்றது. இவருக்கு ஊக்க மளித்தவர்களில் ஒருவர் தோழர் பால தண்டாயுதம் ஆவார்.

தோழர் வானமாமலைக்கு ஏராளமான நண்பர்கள், தோழர்கள் உண்டு. பல அறிஞர்களின் பாராட்டுதலையும் பெற்றவர்.

தோழர் வானமாமலைக்குக் குடும்ப பிரச்சனைகள் பல உண்டு. ஆயினும் இவைகளுக்கு மத்தியில் ஆராய்ச்சித் துறையிலும், கட்சிப் பணிகளிலும் அவர் செலுத்திவரும் கவனம் பாராட்டுக்குரியது.

தமிழகத்தின் சிறந்த ஆராய்ச்சி அறிஞர் ஒருவர் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டது, கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆக்கபூர்வமான சக்திக்கு ஏற்பட்ட வெற்றியாகவே கருதுகிறேன். ஆரம்பத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் கொண்ட பற்றின் காரணமாகவே அவர் படிப் படியாக ஆராய்ச்சியாளராக வளர்ந்து உயர்ந்தார்.

நமது காலத்தில், நம் கண் முன்னே மகத்தான காரியங்களை அடக்கமாகச் செய்துவரும் ஒரு பேரறிஞரை, ஒரு தோழரை, உற்ற நண்பரை வாழ்த்து கிறேன்.

இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கம் இன்னும் நீண்ட பயணம் செய்ய வேண்டி(😊)(😊) [illegible] (😊.)(😊)இந்த இயக்கத்திற்கு அவரது அறிவு, திறமை, உழைப்பு தொடர்ந்து கிடைக்க அவர் நீடூழி வாழ வாழ்த்துகிறேன்.

காணொளிகள்

01] கட்டபொம்மு கூத்து/கதைப்பாடல்/நா.வானமாமலை

https://www.youtube.com/watch?v=zLWlzwd6g8s [17:43]

அறிவோம் அறிஞர்களை: நா. வானமாமலை

03] 04] **பேராசிரியர் நா வானமாமலையின் வாழ்வும் வழியும் ||**

https://www.youtube.com/watch?v=hSTNkE8Oexw [14:05]

சிந்துபூந்துறை || பேராசிரியர் நா ராமச்சந்திரன் உரை

https://www.youtube.com/watch?v=zqGiZMNGq70 [59:09]

(☹)(😊) வானமாமலை (😊)(😊)